Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரீகம்! நாளைய நாகரீகம்!

மகாராசி சில்க்ஸ்

சகல நிகழ்வுகளுக்கும் மகாராசியான ஸ்தாபனம்

மகாராசி சில்க்ஸ்

59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

T.P No - 0777286247

(c-2203)


மலர்: 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 புரட்டாதி 06 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 06 (22.09.2004) புதன்கிழமை இதழ்:357

## விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தியே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்!

### நியூயோர்க்கில் ஜனாதிபதி சந்திரிகா

(நியூயோர்க்)

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமெனில் விடுதலைப் புலிகளுடன் பேசியே தீர வேண்டும். இதற்காக - புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு அரசாங்கம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.



விடுதலைப் புலிகள் தனித் தமிழீழக் கோரிக்கையை முற்றாகக் கைவிடவேண்டும். இலங்கை பல்லின மக்கள் வாழும் சமூகம். அங்கு சிறுபான்மை இனத்தவர்கள் அனைவரும் சம உரிமையுடன் வாழ்கின்றனர். அத்துடன் உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களிடமிருந்து விடுதலைப்புலிகள் பெருமளவு (12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத் தியான நிகழ்வில் பெருமளவானோர் பங்கேற்பு

(கொழும்பு)

உலக சமாதான தினமான நேற்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆயிரக்கணக்கான புத்தபிக்குகள் பிறமதத்தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கூடி சமாதான தியான நிகழ்வில் கலந்து கொண்டனர்.



இந்த நிகழ்வுக்கான ஏற்பாட்டினை சர்வோதயம் மற்றும் சிவில் சமூகம் என்பன ஒழுங்கு செய்திருந்தன.

இங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான ஆண்கள் பெண்கள் மற்றும் சிறுவர்கள் ஆகியோர் வெள்ளைநிற உடை அணிந்து கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது சமாதான தியான நிகழ்வில் ஈடுபட்டனர். இந்த நிகழ்வில் பிரதமர் மஹிந்தராஜபக்ஷ எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக்கட்சியின் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கௌரவமான சமாதானத்தை அடைய புலிகளும், அரசாங்கமும் திடசங்கற்பம்!

## உலக சமாதான தினத்தில் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**கடந்த மூன்று தசாப்தங்களாக தொடர்ந்த யுத்தத்துக்கு அமைதி வழியில் தீர்வுகண்டு – கௌரவமான சமாதானத்தை அடைவதற்குத் தாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசாங்கத் தரப்பும் நேற்று வெளியிட்ட அறிக்கைகளில் உறுதியளித்துள்ளனர்.**

**நேற்று சர்வதேச ரீதியாகக் கொண்டாடப்பட்ட உலக சமாதான தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் சமாதான செயலகமும், விசேட அறிக்கை ஒன்றினை விடுத்திருந்தது.**

**அத்துடன், அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் மங்கள சமரவீரவும் இது குறித்து அறிக்கையொன்றினை வெளியிட்டார்.**

**இந்த அறிக்கைகளிலேயே இரண்டு தரப்பும் – தாம் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாகவும், கௌரவமான சமாதானம் நாட்டில் ஏற்படுவதற்கு உழைக்கத் திடசங்கற்பம் பூண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.**

## பனிச்சங்கேணியில் கிளைமோர்த் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பனிச்சங்கேணியில் கிளைமோர் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

வாகரைப் பிரதேசத்திலுள்ள பனிச்சங்கேணி பாலத்திலிருந்து 300 மீற்றர் தொலைவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது எனவும், இந்தச் சம்பவத்தில் எவரும் பாதிப்படையவில்லை எனவும் தெரியவருகிறது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து செயற்படும் ஆயுதக்குழுக்களே இந்த ஊடுருவலை மேற்கொண்டிருக்கலாம் எனக்கூறப்படுகிறது.

மரமொன்றில் கிளைமோர் குண்டொன்று மறைத்துவைக்கப்பட்டு அந்த வழியாக
(12 ஆம் பக்கம் பார்க்க)

(12 ஆம் பக்கம் பார்க்க)

எம் போராட்ட வரலாற்று சாதனையையிட்டு நான் மாபெரும் மகிழ்ச்சியும் பூரண திருப்தியும் அடைகிறேன்.

– தியாகி லெப்.கேணல் திலீபன்



# பேச்சுக்களை ஆரம்பிக்க புலிகளுக்கு அரசு அழைப்பு

## அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர

கடந்த மூன்று தசாப்பதங்களாக இலங்கையில் இடம்பெற்று வந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு உலக சமாதானத தினத்தில் விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமவீர தெரிவித்தார்.

அரச சமாதானச் செயலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட - சமாதான தினத்தை முன்னிட்டு நடைபெற்ற வைபவத்தில் அமைச்சர் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு இருதரப்பினரும் விட்டுக் கொடுப்புகளுடன் செயற்படவேண்டும்.

சமாதான முயற்சிகளை மீள முன்னெடுப்பதில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களில் காட்டும் நாட்டத்தினைச் செயற்படுத்த இதுவே நல்ல சந்தர்ப்பம்.

மேலும் கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்று வந்த யுத்தத்தினால் இருதரப்பிலும் 60 ஆயிரம் உயிர்கள் பலியாகியுள்ளமையானது இரு தரப்பும் சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிக்கவேண்டியுள்ள அவசியத்தை வலியுறுத்துவதாகவும் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

# கௌரவத்துடனான சமாதானத்துக்கு தமிழ் மக்கள் கரம் கோர்த்துள்ளனர்!

## சமாதானச் செயலகம் அறிக்கை

(கிளிநொச்சி)

அடக்குமுறையும், அடிப்படை மனித உரிமை மறுப்புமற்ற கௌரவத்துடனான சமாதானத்தை உலகில் நிலைத்து நிற்க வேண்டிய சகலமுயற்சிகளையும் செய்வதற்கு - சமாதானத்தை வேண்டிநிற்கும் தமிழ் மக்கள் ஐ.நாவுடனும் சமாதானத்தை நேசிக்கும் மனிதகுலத்துடனும் கரம் கோர்த்து நிற்பதாக -

விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் சர்வதேச சமாதானதினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும்-

சமாதானத்தை வேண்டிநிற்கும் தமிழ் மக்களின் சார்பாக சர்வதேச சமாதான தினத்தைக் கொண்டாடும் ஐ.நாவுடனும், அனைத்துலக மக்களுடனும் இணைந்து கொள்வதில் தமிழீழ விடுதலைப்புலிகள் பெருமைகொள்கின்றனர்.

அரைநூற்றாண்டு காலமாக அடக்குமுறை, பாகுபாடு, அநீதி என்பவற்றிற்கும் - இரண்டு தசாப்தங்களாக ஓர் கொடிய யுத்தத்திற்கும் மத்தியில் போராடிவருபவர்கள் என்ற வகையில் தமிழ்மக்கள் நிலையான சமாதானத்தை வேண்டிநிற்பதுடன், உலகெங்கிலும் உள்ள சமாதானத்தை விரும்புவோருடனும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டோருடனும் சேர்ந்து சமாதான தினத்தை அர்த்தமுள்ளதாக்க விழைந்து நிற்கின்றனர்.

தமிழ் மக்களின் இறைமையும், கௌரவத்துடனும் சுதந்திரத்துடனுமான சமாதானமும்- இத்தீவை 1505 இல் அந்நியர்கள் ஆக்கிரமித்தபோது பறிக்கப்பட்டன. இறுதியாக 1948 இல் பிர்த்தானியர் இந்தத் தீவைவிட்டுச் சென்றபோது தமிழ்மக்கள் கண்டதெல்லாம் சுதந்திரமென்ற பெயரில் மீண்டும் அடக்கியாளப்படும் ஓர் கூட்டுக்கலவை அரசமைப்பையே.

எண்ணிக்கையில் சிறுபான்மையினரென அடையாளமிடப்பட்டு மேலான்மைச் சிந்தனையும், பேரினவாத போக்கும் கொண்ட ஓர் அரசியல் சூழ்நிலையில் தமிழ் மக்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# மிதிவெடி வெடித்து குடும்பஸ்தர் காயம்

உரும்பிராய் பகுதியில் தோட்டவேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மிதிவெடி வெடித்ததில் காயமடைந்தார்.

இச்சம்பவத்தில் உரும்பிராய் தெற்கு யோகபுரத்தைச் சேர்ந்த சபாரத்தினம் உதயகுமார் (வயது 36) என்ற குடும்பஸ்தரே காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் காலை 11 மணியளவில் தனது வளவில் தோட்டவேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது இவரது மண்வெட்டி தவறுதலாக மிதி வெடியில் பட்டு வெடித்ததில் இவர் காயமடைந்தார்.

## சிறு விளம்பரம்

வினாகிரி, அயடின் கலந்து உப்பு, ஐசிங் சீனி, பேக்கிங் பவுடர், அப் பச்சோடா, கொக்கோ பவுடர், சிற்றிக் அசிட் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ். இல : 777, கே.கே. எஸ் றோட், யாழ்ப்பாணம். (C/3022)

## திறைஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், நக்மா பார்த்திபன் நடித்த

**அரவிந்தன்**

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) Return to two moon junction

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 6.00 (பு.நே) (சி-2723)

## நூல்நிலைய திறப்புவிழா

நீர்வேலி காமாட்சி அம்மன் இந்து பரிபாலன சபையின் அறநெறி நூல் நிலையம் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. (64)

## ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த



அரசாட்சி


காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, (பு.நே) (சி-27..)

## நாகம்ஸ் சுன்னாகம்

இன்று முதல்

விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த

மதுர



தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

## YOGI HOME SCIENCE ACADEMY EXHIBITION
## CAKE AND SUGAR CRAFT
## கேக் அலங்கார கண்காட்சி

யாழ். பெட்டா எசன்ஸ் சப்லயர்ஸ் ஆதரவில் எமது அக்கடமி மாணவிகள் வழங்கும் கேக், மாச்சீனி மலர் அலங்கார கண்காட்சி

24.09.2004 முதல் 28.09.2004 வரை நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.E.சரவணபவன் அவர்கள் ஆரம்பித்து வைப்பார்.

இடம் - 75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

காலம், நேரம் : 24ஆம் திகதி
காலை 11 மணிமுதல் இரவு 7 மணிவரை
25, 28ஆம் திகதிவரை காலை 9 மணி இல் இருந்து இரவு 7 மணிவரை.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

T.P. 222 2796 இயக்குநர்.

(939)

சிவமயம்.

# 31ம் நாள் நினைவும் சபிண்டீகரண அழைப்பிதழும்

அன்புடையீர்,

கடந்த 23.08.2004 திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்த எமது கண்கண்ட தெய்வமாகவும், குடும்பத்தின் குலவிளக்காகவும் இருந்து வழிகாட்டிச் சென்ற

## அமரர்.சின்னையா கந்தவனம்

**(மறியலப்பா)**

அவர்களின் அந்தியேஸ்டி சபிண்டீகரணக் கிரிகைகள் இன்று 22.09. 2004 புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

கரவெட்டி வடக்கு,
சரஸ்வதி வித்தியாலய வீதி,
கரவெட்டி.

இங்ஙனம்
க.சூரியகுமார் (மகன்)

(சி/3176)

# யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்
## பரிசுத் தினம் - 2004

2004.09.22 புதன் காலை 10.30 மணி

*பிரதம விருந்தினர் :*

திரு.நா.வரதராசா, B.Com (Hons) Dip.in.Ed, S.LE.As.
(யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்).

*விசேட விருந்தினர் :*

திருமதி. இ. இரட்ணராஜா அவர்கள்.
(உதவிப் பிரதேச செயலர், நல்லூர்).

**தலைமையாளர் :**

நயினை எஸ்.சோமேஸ்வரபிள்ளை, அதிபர்
B.A(Cey), Dip.in.Ed, S.L.P.s & J.P

நல்வரவை நாடும்,
பள்ளிச்சமூகம்,
யா/ஆனைப்பந்தி மெ.மி.வி.

(940)

# கூறுவிலை விற்பனை (Sealed Tender)
## வட பிராந்திய போக்குவரத்துச்சபை – யாழ் சாலை

வட பிராந்திய போக்குவரத்துச்சபையின் பேருந்துகளிலிருந்து பாவித்துக் கழிக்கப்பட்ட ரயர்கள் 430 கூறுவிலை விற்பனைக்காக வட பிராந்திய போக்குவரத்துச்சபை, பலாலி வீதி, கோண்டாவிலில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த ரயர்களைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் 22.09.2004 தொடக்கம் 30.09.2004 வரை (சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய வேலை நாட்களில்) காலை 09.30 மணியிலிருந்து மாலை 04.00 மணிவரை இவற்றைப் பார்வையிடலாம். இதற்கான கூறுவிலை விற்பனைப் படிவங்களை வட பிராந்திய போக்குவரத்துச்சபை தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்கவும்.

தலைவர் கூறுவிலைச்சபை,
வ.பி.போ.ச.
கோண்டாவில்.

(C/3177)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

# கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்குக் கிழக்கு மாகாணக்கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998-05-19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்குக் கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்" இதற்கு அமைய யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 1997-02-17ஆம் திகதி 963/1 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய மேற்படி சங்கதின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிச்சாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

★ இதற்கமைய இக்கூட்டங்களிற்கு சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

★ கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25பேர் எது குறைவோ அத்தொகையாகும்.

★ தவிசாளர் குறித்த கிளையின் பொதுச் சபையிலிருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார் இவர்களுள் ஆகக்குறைந்தது இருவர் 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பாட்டவராக இருத்தல் வேண்டும்.

★ சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின், தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.

★ இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.

★ தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

## கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்

| இல. | கிளை பெயர் | தவிச்சாளர் பெயர் | காலம் திகதி | நேரம் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|
| 01 | அல்வாய் தெற்குA | திரு.செ.திருச்செல்வம் | 02.10.2004 | 10 | யா/ அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் அல்வாய் |
| 02 | அல். தெற்கு மத்தி | செல்வி. இ.இராசரத்தினம் | 02.10.2004 | 10 | யா/ அல்வாய் அம்பாள் வித்தியாலயம் அல்வாய் |
| 03. | கட்டைவேலி | திரு.பாலச்சந்திரன் | 02.10.2004 | 10 | கிளைக்கட்டட மண்டபம். |
| 04. | கல்வத்தை | திருமதி வை.சுகன்யா | 02.10.2004 | 10 | கிளைக்கட்டட மண்டபம் |
| 05. | கனுவில் | திருமதி செ. அழகேந்திரராசா | 02.10.2004 | 10 | யா/ திரு இருதய கல்லூரி ஆரம்ப பாடசாலை கரவெட்டி |
| 06. | கரவெட்டி மேற்கு | திரு.சு. கணேசு | 02.10.2004 | 10 | யா/ திரு இருதய கல்லூரி வதிரி கரவெட்டி. |
| 07. | கரவெட்டி கிழக்கு | திரு.ஐ.நாகேஸ்வரன் | 02.10.2004 | 10 | கிளை அயல் மண்டபம். |
| 08 | கோவிற்கடவை | திரு.சோ.குமாரவேல் | 02.10.2004 | 10 | யா/ ஞானாசாரியார் கல்லூரி கரவெட்டி. |
| 09. | நெல்லியடி | திரு.கு. அருந்தவநாதன் | 02.10.2004 | 10 | யா/ நெல்லியடி ம.ம. வித்தியாலயம் கரவெட்டி |
| 10. | நுகவில் | செல்வி.ரி.தவலீலா | 02.10.2004 | 10 | யா/ விக்னேஸ்வராக் கல்லூரி கரவெட்டி. |
| 11. | சந்திரா | செல்வி. கே.ஜெயசுதா | 02.10.2004 | 10 | நாமகள் சனசமூக நிலையம் கர. கிழக்கு கரவெட்டி. |
| 12. | சண்டில் | திரு.க.குகதாசன் | 02.10.2004 | 10 | கிளைக்கட்டட மண்டபம். |
| 13. | துன்னாலை தெற்கு | திரு.த.செல்வசோதி | 02.10.2004 | 10 | கிளைக்கட்டட மண்டபம். |
| 14. | கிளான் | திரு.ஆர். விஜயமோகனராசா | 02.10.2004 | 10 | யா/ யாழ். துன்னாலை தெற்கு அ.த.க.பா. கரவெட்டி. |
| 15. | வதிரி | செல்வி. பா.கிருஷ்ண பவானி | 02.10.2004 | 10 | யா/ யாழ். நெல்லியடி மெ.மி.த.க.பா. கரவெட்டி. |
| 16. | யார்க்கரை | திரு.ரி.என். ராஜா | 02.10.2004 | 10 | யா/ யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் கரவெட்டி. |
| 19. | துன்னாலை வடக்குA | திரு.பொ. மோகன் | 02.10.2004 | 10 | வல்லியானந்தம் பா. பாடசாலை துன்னாலை கரவெட்டி. |
| 20. | துன்னாலை வடக்குB | திருமதி பா. கலைச்செல்வி | 02.10.2004 | 10 | யா/ காசிநாதர் வித்தியாலயம் துன்னாலை கரவெட்டி. |
| 21. | அல்வாய் தெற்குB | திருமதி அ. ஜெகநாதன் | 02.10.2004 | 10 | மனோகரா பாலர் பாடசாலை மண்டபம் அல்வாய். |
| 23. | கிழவிதோட்டம் | திரு.வை. கைலைநாதன் | 02.10.2004 | 10 | கவுந்தில் சனசமூக நிலையம் கரவெட்டி. |
| 24. | இராசக்கிராமம் | திரு.பி. சிவகுமார் | 02.10.2004 | 10 | இராசர் கிராமம் சனசமூக நிலையம் கரவெட்டி. |
| 25. | வதிரி வடக்கு | திரு.எம்.எஸ். சண்முகநாதன் | 02.10.2004 | 10 | வதிரி தமிழ் மன்றம் அல்வாய். |
| 30. | அல்லையம்பதி | திரு.எஸ்.சபாரட்ணம் | 02.10.2004 | 10 | அல்லையம்பதி பா.பாடசாலை அல்லையம்பதி துன்னாலை. |

கூ.அ.உ. ஆணையாளர் பணிமனை,
857, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
16.09.2004.

கரவெட்டி
கூ.அ.உ. ஆணையாளர்
செ.கனகசபாபதி.

(சி/3175)

# புலிகளின் முகாம்கள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்க கோரிக்கை

(திருகோணமலை)

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் அமைத்துள்ள முகாமகள் தொடர்பான அறிக்கை ஒன்றை விரிவாகப் பெற்றுத் தருமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் மீண்டும் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

விடுதலைப் புலிகள் திருகோணமலைத் துறைமுகத்துக்கு தென்புறமாக முகாம்கள் மற்றும் பதுங்குகுழிகளை அமைத்துள்ளதாக கடற்படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்தே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இவ்வாறு கோரியுள்ளார்.

இருப்பினும் இந்த விடயம் தொடர்பான இடைக்கால அறிக்கை ஒன்றை இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழு பாதுகாப்பு செயலாளருக்கு வழங்கியுள்ளது.

இதனுடன் தொடர்புடைய முழுமையான அறிக்கையை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கவுள்ளது.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்பு, மீண்டும் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்தச் சந்திப்பு மட்டக்களப்பில் நடைபெறவுள்ளதாக - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை நடைபெற்று வந்த இந்த சந்திப்புக்கள், கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வந்த கொலைச் சம்பவங்களையடுத்து இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உரங்களின் விலைகளும் விரைவில் அதிகரிக்குமாம்!

## விவசாய அமைச்சர் அனுரகுமார



(கொழும்பு)

உரவகைகளின் விலைகளையும் விரைவில் அதிகரிக்க வேண்டியுள்ளதாக விவசாய அமைச்சர் அனுரகுமார திசநாயக்க தெரிவித்தார்.

விவசாய உற்பத்திக்கான உழவர் சங்கங்களை அமைப்பதற்கான ஆரம்ப விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-


டொலரின் பெறுமதி உயர்ந்து செல்வதாலும், நாணயத்தின் பெறுமதி குறைந்து செல்வதாலுமே உரத்தின் விலையை அதிகரிக்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

உரமூடை ஒன்றின் விலையை 250 ரூபாவால் அதிகரிக்கப்படவேண்டிய நிலை தோன்றியுள்ளது. நாடு பொருளாதார ரீதியாகப் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

வாழ்க்கைச் செலவுகள், உணவுப் பிரச்சினை, இருப்பிடப் பிரச்சினை, தொழிற்பிரச்சினை, ஏனைய தேவைகள், கல்வி, சுகாதாரம் என சகல துறைகளிலும் நாடு வீழ்ச்சியடைந்து செல்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

# இலங்கை அரசியலில் உள்ளவை எல்லாமே இனவாதக் கட்சிகள்!

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்



(கொழும்பு)

இலங்கை அரசியலைப் பொறுத்தவரையில் அனைத்துக் கட்சிகளுமே இனவாதக் கட்சிகளேயாகும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலை தொடர்பாக அரசியற்கட்சிகளின் போக்குக் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், இலங்கை அரசியலில் தேசியக் கட்சி என்ற பெயர்ப்பலகை உள்ளதே தவிர உண்மையில், அனைத்துக் கட்சிகளும் இனவாதக் கட்சிகளாகும். தமது கட்சிகள் சிறுபான்மை மக்களின் வாக்குகளையும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக தமது கட்சிகளுக்குள்ளே ஒரு சில சிறுபான்மை மக்களது பிரதிநிதிகளையும் உள்வாங்கியுள்ளார்கள்.

உண்மையில், இலங்கை அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் இரு பிரதான கட்சிகளும் இந்த நாட்டின் சிறுபான்மை மக்களின் உணர்வுகளை ஏற்றுக்கொள்பவையாக இல்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பெண்களுக்கு மகப்பேற்று விடுமுறை; 84 நாட்களாக அதிகரிக்க தீர்மானம்!

(கொழும்பு)

பெண் ஆசிரியர்கள் உட்பட அனைத்து பெண் அரச ஊழியர்களுக்கு - அனைத்து மகப்பேறுகளுக்கும் 84 நாட்கள் சம்பளத்துடன் கூடிய விசேட மகப்பேற்று விடுமுறை வழங்கப்படும். இந்த 84 நாள் விடுமுறையில் சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.

இதுவரை பெண் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட மகப்பேற்று விடுமுறை அவர்களின் முதல் இரு பிரசவங்களுக்கு மட்டுமே 84 நாட்களாக இருந்தது. 3 ஆவது மற்றும் அதற்கடுத்த பிரசவங்களுக்கு 42 நாட்கள் மட்டுமே இதுவரை விடுமுறை வழங்கப்பட்டது.

இந்தநிலை இனி மாற்றப்பட்டு அனைத்து மகப்பேறுகளுக்கும் எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி 84 நாட்கள் விடுமுறை வழங்கப்படும்.

மேற்கத்தேய நாடுகள், ஐக்கிய நாடுகள் தொழில் ஸ்தாபனத்தின் விதிமுறைகளுக்கேற்ப அனைத்து பிரசவங்களுக்கும் பெண் ஊழியர்களுக்கு 84 நாட்கள் விடுமுறை வழங்கப்பட்டு வருகிறது. இந்த நடைமுறை தற்போது இலங்கையிலும் அமுல் படுத்தப்படுத்தப்பட்டு வருகிறது.

கர்ப்பம் தரித்த 5 ஆம் மாதம் முதல் பெண் அரச ஊழியர்கள் பிரசவம் நடைபெறும் நாள்வரை தினமும் 30 நிமிடம் கடமை நேரத்தின் ஆரம்பத்தில் தாமதமாக செல்லவும், அதேபோல் கடமைநேரம் நிறைவுபெறும் நேரத்திற்கு முன்னர் 30 நிமிடம் முன்னதாக வெளியேறவும் முடியும்.

குழந்தை பிறந்து 6 மாதம் நிறைவடையும் வரை குழந்தைக்கு பாலூட்டுவதற்காக வேலை நேரத்தில் ஒரு மணி நேரம் வீடு செல்ல அனுமதி வழங்கப்படும்.

பிள்ளை இறந்து பிறந்தால், கருச்சிதைவு ஏற்பட்டால் அல்லது பிறந்தவுடன் பிள்ளை இறந்தால் - அத்தகைய நிலையில் 6 வாரங்கள் விசேட மகப்பேற்று விடுமுறை வழங்கப்படும்.

இங்கு குறிப்பிடப்பட்ட விடுமுறைகளைப்பெறுவதற்கு வைத்தியச் சான்றிதழோ அல்லது குழந்தையின் பிறப்புச் சான்றிதழோ திணைக்களத் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

இதேவேளை, சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் (ILO) விதிகளின் படி மகப்பேற்று விடுமுறைக்கு உரித்தான பெண் ஊழியர்களின் கணவன்மாரும் அரச ஊழியராயின், அவர்களுக்கும் மகப்பேற்று விடுமுறை வழங்கப்படவேண்டும் என பல தொழிற்சங்கங்கள் அரசைக் கோரிவருகின்றன.

மகப்பேற்று விடுமுறைகள் தொடர்பாக அரசினால் வெளியிடப்பட்ட இல 3/2004 சுற்றறிக்கையில் புதிய மகப்பேற்று விடுமுறைகள் பற்றி கூறப்பட்டுள்ளதுடன், இந்தச் சுற்றறிக்கை பொது நிர்வாக அமைச்சினால் சகல அரச திணைக்களத் தலைவர்களுக்கும் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இது நீண்டகாலமாக தொழிற்சங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி என்றும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

(10)

# தனியார் வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியர்களுக்கு எதிராக நடவடிக்கை!

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரச மருத்துவமனைகளில் பணியாற்றும் வைத்தியர்கள் அங்கு கடமைகளை நிறைவேற்றாது தனியார் மருத்துவமனைகளில் சேவையில் ஈடுபடுகின்றனர்.

எனவே, இவ்வாறு தனியார் மருத்துவமனைக்குச் செல்லும் வைத்தியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாக சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அரச வைத்தியர்கள் தனியார் வைத்தியசாலைகளில் சேவையில் ஈடுபடுவதை எதிர்க்கவில்லை. ஆனால், அரச வைத்தியசாலை சேவைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் செயற்படவேண்டும்.

தனியார் வைத்தியசாலைகளில் மேலதிக நேரங்களில் கடமையில் ஈடுபடுவதனால், அவர்களை வேறு இடங்களுக்கு மாற்றுவது கடினமாக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# நிரந்தர நியமனம் கிடைக்கவுள்ள 24,000 சமுர்த்தி அலுவலர்கள்!

தகுதிகாண் காலத்தைப் பூர்த்தி செய்த 24 ஆயிரம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றிய பலருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாதிருப்பதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விரைவில் 24 ஆயிரம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அரச சேவையில் உள்ளீர்க்கப்படவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

## சச்சுமாஸ்ரர்கொலை சந்தேகநபர்

# பாதுகாப்புக் காரணங்களால் தொடர்ந்து விளக்கமறியலில்!

(கொழும்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பான பிரதான சந்தேக நபரான மகேந்திரன் புவிதரன் நேற்று 3 ஆவது தடவையாக நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவில்லை.

இதனையடுத்து இவரது விளக்கமறியலை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை நீடித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 15 ஆம் திகதி கருணா அணியைச் சேர்ந்த சச்சுமாஸ்டர் எனப்படும் கணபதிப்பிள்ளை மகேந்திரன், தீபன் எனப்படும் சரவணமுத்து சாந்தகுமார் ஆகியோர் சிறைச்சாலைக்குள் வைத்து குறிப்பிட்ட சந்தேகநபரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சந்தேக நபர் பாதுகாப்பின் நிமிதம் மட்டக்களப்புச் சிறைச்சாலையிலிருந்து மொனராகலை சிறைச்சாலைக்கு அன்றைய தினம் மாற்றப்பட்டு, தற்போது பதுளை சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார்.

3 ஆவது தவணையில் நேற்று முன்தினம் இவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட வேண்டிய இந்த சந்தேக நபர், பாதுகாப்புக் காரணங்களுக்காக மட்டக்களப்பு நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படவில்லை.

இந்தக் கொலைகளுக்கு உதவினார் என்ற சந்தேகத்தின் பேரில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை உத்தியோகத்தரான தம்பிராசா அருளம்பலம் மட்டும் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதனையடுத்து நீதிபதி இருவரது விளக்கமறியலையும் எதிர்வரும் 5 ஆம் திகதிவரை நீடித்தார். (01)

# புதுயுகம் ஒன்றை ஏற்படுத்தும் அரசை அமைக்க முயற்சி!

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

நாட்டிற்கு புதிய யுகம் ஒன்றை ஏற்படுத்தும் அரசாங்கமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஹிங்குராங்கொடவில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பான கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

மக்களின் கருத்துக்களுக்கேற்ப ஐக்கிய தேசியக் கட்சி புனரமைப்பு நடவடிக்கைகளை எதிர்வரும் நவம்பர் மாதத்திற்கு முன்னர் மேற்கொள்ளும். மக்களிடையே பெரும் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தி ஆட்சிபீடம் ஏறிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம்- நான்கு மாதங்கள் செல்வதற்கிடையில் அந்த எதிர்பார்ப்புக்களை சிதறடித்துள்ளதாகவும் அத்தநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார். (01)

# எதிர்க்கட்சியில் இருந்திருந்தால் போராட்டம் நடத்தியிருப்பேன்!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

எதிர்க்கட்சியில் இருந்திருந்தால் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்திருப்பேன் என, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அதிகரித்துவரும் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் விரிவான செயல் திட்டம் ஒன்றைத் தயாரித்திருப்பதாக கண்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் கூறினார்.

நாட்டில் தற்போது பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்கின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்து நாம் அதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்து வருகின்றோம்.

இதன்படி வெளிநாட்டில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யவும் உத்தேசித்துள்ளோம். அரிசி இறக்குமதி செய்யப்பட்ட பின்னர் விலைகள் கட்டுப்படுத்தப்படும் என்றும் கூறியிருக்கின்றார்.

பொருட்களின் விலை அதிகரிப்புக்கு, பிரதமராகப் பதவி வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியே காரணமென்பதை மறந்து, தனது ஆட்சியையே பிரதமர் குறைகூறியிருப்பதைக் கொழும்பு ஊடகங்கள் கடுமையாக விமர்சித்துள்ளன.

# இந்தோனேஷிய ஜனாதிபதித் தேர்தல்; தோல்வியடையும் நிலையில் மேகவதி!



(ஜகர்தா)
இந்தோனேஷியாவில் ஜனாதிபதித் தேர் தலுக்கான வாக்குப் பதிவு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் ஜனாதிபதி மேகவதி சுகர்னோபுத்ரி தோல்வியடைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தோனேஷியாவில் நீண்டநாள் ஜனா திபதியாக இருந்த சுகர்னோ, 1998 இல் பதவி விலகினார். அதன்பின்னர், ஆறு ஆண்டுகள் கழித்து இந்தோனேஷியாவில் நேற்றுமுன் தினம் ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. வர லாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தேர்த லில் வாக்குப் பதிவு அமைதியான முறையில் இடம்பெற்றது.

இந்தத் தேர்தலில் ஜனாதிபதி மேகவதி சுகர்னோபுத்ரியும், அவரை எதிர்த்து சுசிலோ பாம்பங் யுதோயோனோவும் மோதுகின்றனர். இதில் பாம்பங் வெற்றிபெறுவார் என்று கருத் துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

"கண்டிப்பாக வெற்றிபெறுவேன். நான் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிக முள்ளன." என்று பாம்பங் கூறினார். இவர் இந்தோனேஷிய பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர்.

பாம்பங்கின் வெற்றி வாய்ப்புக்கள் பற்றி மேகவதியிடம் கேட்டபோது, "முடிவைப் பொறுத்திருந்து பார்ப்போம். இப்போது பதட்ட மடைய வேண்டிய அவசியமில்லை" என் றார்.

ஜகார்த்தாவில் கடந்த வாரம், அவுஸ் ரேலிய தூதரகம் முன்பாக பயங்கரமான குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. அல் - கொய்டா அமைப்பைச் சேர்ந்த தீவிர வாதிகள் நடத்திய இந்தத் தாக்குதலில் ஒன் பது பேர் கொல்லப்பட்டனர். 200 பேர் காய மடைந்தனர்.

இருப்பினும், நேற்றுமுன்தின வாக்களிப் பில் மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். அடுத்த மாதம் ஐந்தாம் திகதி வாக்கு எண் ணிக்கை நடைபெறவுள்ளது.

## உலகிலேயே சிறிய நாய்!




**ஸ்லோவாக்கியா நாட்டின் குவூக்கா நக ரில் இகார் கெவிட்கோ என்பவர் தன் வீட்டில் ஒரு நாய் வளர்த்து வருகிறார். இந்த நாயின் பெயர் டாங்கா. உலகிலேயே மிகச்சிறந்த நாய் இதுதான்.**

**இந்த நாயின் நீளம் 18.8 சென்ரிமீற்றர். உலகின் மிகச்சிறிய நாய் என்று இந்த நாய் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற் றுள்ளது. அதிக நீளம் உள்ள நாய் பற்றித் தகவல் முன்பு வெளியானது தெரிந்ததே.**

### அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

# புஷ்ஷும், ஹெரியும் ஒரே மேடையில் விவாதம் நடத்த இணக்கம் தெரிவிப்பு



(வொஷிங்ரன்)
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டி யிடும் புஷ்ஷும், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் ஹெரியும் 3 நாட்கள் ஒரே மேடையில் நேருக்கு நேர் சந்தித்து விவாதம் நடத்தவுள் ளார்கள்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வருகிற நவம்பர் மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள் ளது. இதில் தற்போதைய ஜனாதிபதி புஷ் குடியரசுக் கட்சி சார்பில் மீண்டும் போட்டியிடு கிறார். அவரை எதிர்த்து ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோன்ஹெரி போட்டியிடுகிறார்.

இவர்கள் இருவரும் ஒரே மேடையில் நேருக்குநேர் சந்தித்து விவாதிப்பதற்கான திகதிகளை இரு கட்சி உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கமிஷன் தீர்மானித்துள்ளது.

புளோரிடாவில் கோரல் கேபிள்ஸ் என்ற இடத்தில் வரும் 30 ஆம் திகதியும், செயின் லூயிஸ் நகரில் அடுத்த மாதம் 8 ஆம் திகதி யும், அரிசோனாவில் டெம்பே எனும் இடத்தில் 13 ஆம் திகதியும் இருவரும் சந்தித்து விவா தம் நடத்துவார்களென கமிஷன் தீர்மானித் தது.

இந்தத் திகதிகளுக்கு புஷ்ஷும், ஹெரியும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

30 ஆம் திகதி நடைபெறவுள்ள விவாதம் 90 நிமிடங்கள் நடைபெறும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

துணை ஜனாதிபதி பதவிக்கான விவாதம் ஒக்ரோபர் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் டிக்செனியும், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் எட்வர்ட்சும் விவாதிக்கிறார்கள்.

திகதிகளுக்கு ஒப்புதல் கொடுத்துவிட்ட போதிலும், புஷ் தரப்பு இரு நாட்கள் மட்டுமே விவாதம் செய்ய விரும்புகிறது. ஒக்ரோபர் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ள விவாதத்தில் கலந்துகொள்வதை அவர்கள் விரும்பவில்லை.

### ஈராக்கில் கடத்தப்பட்ட

# அமெரிக்கப் பிரஜைகளில் ஒருவர் சிரச்சேதம் செய்யப்பட்டார்



ஈராக்கில் வைத்துக் கடத்தப்பட்ட இரண்டு அமெரிக்கர் மற்றும் பிரிட்டன் பிரஜை உட்பட்ட மூவரில் அமெரிக்கப் பிரஜை ஒருவர் சிரச் சேதம் செய்யப்பட்டதாக, இஸ்லாமிய கிளர்ச்சி வாதிகள் அறிவித்துள்ளனர்.

சிரச்சேதம் செய்யப்பட்டவர் இயூஜின் ஆம்ஸ்ரோங் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் கொல்லப்படும் காட்சியை அராபிய இணையத்தளமொன்று நேற்றுக் காண்பித்தது.

அல்கொய்டா அமைப்பின் தலைவர்களில் ஒருவரான அபு - முசாப் அல் சர்காவியின் தலைமையில் முகமூடி அணிந்திருந்த ஐந்து நபர்கள், கொல்லப்பட்டவரைத் தமக்கு முன் னால் முழங்காலில் இருக்கவிட்டு, தமது அறிக்கையை வாசித்தனர். இதன் பின்னர் சர்காவி தனது கையில் வைத்திருந்த கத்தி யால், அமெரிக்கப் பிரஜையின் கழுத்தை வெட்டிப் படுகொலை செய்தார்.

படுகொலை செய்யப்பட்டவரின் உடல் ஈராக் கிலுள்ள ஒரு இடத்தில் கண்டெடுக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திற் குத் தெரிவித்தனர்.

இதேவேளை, தமது கோரிக்கைகள் அடுத்த 24 மணி நேரத்திற்குள் நிறைவேற்றப்படாவிட் டால் கடத்தப்பட்ட மற்றைய அமெரிக்கப் பிரஜையும் கொல்லப்படுவார் என கிளர்ச்சி வாதிகள் எச்சரித்துள்ளனர்.


# ஹெயிட்டியில் வெள்ளப்பெருக்கு; 600 பேர் பலி!

(ஹெயிட்டி)
ஹெயிட்டியில் இடம்பெற்றுவரும் கடும் மழையினால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கி னால் சுமார் 600 பொதுமக்கள் கொல்லப்பட் டுள்ளதாக ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த 500 பேரின் உடல்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாக ஐ.நாவின் ஹெயிட்டிக்கான சமாதானப் படை யின் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு நாட்களாகப் பெய்த கடும் மழையால் ஹெயிட்டியில் உள்ள சகல வீடு களுக்கும் வெள்ளம் உட்புகுந்துவிட்ட தென வும், சில பகுதிகளில் மூன்றாவது மாடிவரை வெள்ளம் புகுந்துள்ளதெனவும் இதனால் சேதங்கள் இன்னும் அதிகரிக்கலாமெனவும் செய்திகள் தெரிவித்தன.

உதவிப் பணிகள் தற்போதுதான் ஆரம்பிக் கப்பட்டுள்ளதெனவும், அதுவும் மந்த கதியிலேயே இடம்பெற்றுவருவதாகவும் செஞ்சிலுவைச் சங் கத்தின் ஹான்ஸ் ஹாவிக் பி.பி.ஸிக்குத் தெரி வித்தார்.

ஹெயிட்டியின் மிகப்பெரிய நகரான



கோணாய்வெஸ் பகுதியில் இருந்து 80 வீத மான மக்கள் வெள்ளப் பெருக்கினால் பாதிக் கப்பட்டுள்ளார்கள். சுமார் இரண்டு லட்சம் மக கள் இந்தப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந் துள்ளதாகவும், ஐ.நா.வின் உலக உணவு நிகழ்ச்சித் திட்ட அறிக்கை தெரிவித்தது,

ஹெயிட்டியில் ஏற்பட்டுள்ள வெள்ள அழிவை யடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவா ரணப் பொருட்களை வழங்குவதற்கு சர்வதேச நாடுகளின் உதவியை ஹெயிட்டியின் உள் துறை அமைச்சர் கோரியுள்ளார்.

வெள்ளத்தால் பெருமளவில் பாதிக்கப் பட்ட கோணாய்வெஸ் பகுதி மக்களுக்கு வழங்க 40 மெற்றிக்தொன் அவசர கால உதவிப் பொருட்கள் 12 வாகனங்களில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக ஐ.நாவின் உலக உணவுத் திட்ட அமைப்பு தெரிவித்தது.

## ஐதரசன் செல் கார்கள்!



**ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த 'ஹைசன' என்ற நிறுவனம் புதிய கார் ஒன்றைத் தயா ரித்துள்ளது. இந்தக் காருக்கு பெட்ரோல், டீசல் எதுவும் தேவையில்லை. ஐதரசன் வாயு வைப் பயன்படுத்தும் பற்றறி செல் மட்டும் போதும். 3 கிலோ எடையுள்ள ஐதரசன் செல் களைப் பயன்படுத்தி 3000 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்ய இந்த நிறுவனத்தின் பொறி யியலாளர்கள் முடிவு செய்துள்ளனர்.**

### ஐ.நா.பாதுகாப்புச் சபையில்

# இந்தியா நிரந்தர உறுப்பினராவதை பாகிஸ்தான் எதிர்க்குமென அறிவிப்பு!

(ஜெனீவா)
ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் ஆவதற்கு இந்தியா மேற்கொள் ளும் முயற்சியைத் தடுத்து நிறுத்துவோம் என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினராவதற்கு இந்தியா தீவிர முயற்சி செய்துவருகிறது. இதற்குப் பல்வேறு நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. இந்தியாவைப் போல் ஜேர்மனி, ஜப்பான், பிரேசில், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளும் ஐ.நா. பாதுகாப்புச் சபை யில் நிரந்தர உறுப்பினராகும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இந்த விடயத்தில் இந்தியாவும், மேற் கண்ட நாடுகளும் ஒன்றுக்கொன்று ஆதரவு தெரிவித்திருக்கின்றன.

ஐ.நா.சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வ தற்காக அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் மன்மோகன்சிங், அங்கு வருகிற 24 ஆம் திகதி பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

இந்த நிலையில், ஐ.நா. பாதுகாப்புச் சபை யில் இந்தியா நிரந்தர உறுப்பினர் ஆவதைத் தடுத்து நிறுத்துவோம் என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இது குறித்து ஐ.நா. சபைக்கான பாகிஸ் தானின் நிரந்தரப் பிரதிநிதி முனிர் அக்ரம் கூறியதாவது -

ஐ.நா.பாதுகாப்புச் சபையின் உறுப்பினர் கள் எண்ணிக்கையை அதிகரிப்பதை பாகிஸ் தான் எதிர்க்கும். ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் ஆவதற்காக இந்தியா மேற் கொள்ளும் முயற்சிகளை நாங்கள் கடுமை யாக எதிர்ப்போம். அத்துடன் சில உறுப்பினர் களைச் சேர்க்க முடிவுசெய்தால், ஜேர்மனி, ஜப் பான் ஆகிய நாடுகளுக்குப் பாகிஸ்தான் ஆத ரவு தெரிவிக்கும் என முனிர் அக்ரம் கூறினார்.

ஐ.நா.பாதுகாப்புச் சபைக்கு புதிய உறுப் பினர்களை நியமிப்பதற்கு எதிர்ப்புத் தெரி வித்துவரும் நிலையைக் கைவிடவேண்டும் என்று ஏற்கனவே, பாகிஸ்தானை - ஜேர்மனி யும், ஜப்பானும் வற்புறுத்தியுள்ளன. இது தொடர்பாக அந்த இரு நாடுகளின் வெளி யுறவு அமைச்சர்களும் சமீபத்தில் பாகிஸ் தான் சென்று பேச்சு நடத்தியமை குறிப் பிடத்தக்கது.

## மாகாண மட்ட தமிழ்மொழித் தினம் - 2004 போட்டி முடிவுகள்

| | |
|---|---|
| **தமிழறிவு வினாவிடை (திறந்த போட்டி)** | |
| 1 யாழ்ப்பாணம் | யாழ். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி |
| 2 மட்டக்களப்பு | மட். வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயம் |
| 3 திருகோணமலை | தி. இ.கி.ச.ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி |
| **முஸ்லிம்நிகழ்ச்சி (குழு 1)** | |
| 2 மட்டக்களப்பு | மட். வாழைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலயம் |
| 3 வவுனியா | வ. முஸ்லிம் மகா வித்தியாலயம் |
| **சிங்கள மாணவர்களுக்கான தமிழ் வாசிப்பு (விசேட பிரிவு 1)** | |
| 1 இ.டி.சுஜான் சமிந்து | தி.சிங்கள மத்திய மகா வித்தியாலயம் |
| 2 மஹேசி மதுஷிகா சமரகொடி | மடுகந்த மகா வித்தியாலயம் |
| **சிங்கள மாணவர்களுக்கான தமிழ் வாசிப்பு (விசேட பிரிவு 2)** | |
| 1 எம்.தாரக துலாஜ் | தி.திஸ்ஸ மகா வித்தியாலயம் |
| 2 ஆர்.கே.துஷ்னிமா நதீஷானி | வ.மடுகந்த மகா வித்தியாலயம் |
| **சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்துப் போட்டி (விசேட பிரிவு 1)** | |
| 1 எஸ்.எம்.நிஸான் செல்வந்தி | தி.திஸ்ஸ மகா வித்தியாலயம் |
| 2 ஆர்.எம்.லக்ஷிகா | வ.பரக்கும் மகா வித்தியாலயம் |
| **சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்துப் போட்டி (விசேட பிரிவு 2)** | |
| 1 ஜெ.எம்.டி.இதுசாரி உமந்தா | தி.சிங்கள மகா வித்தியாலயம் |
| 2 இனெஸ்கா நெலும் விமசேன | வ.மடுகந்த மகா வித்தியாலயம் |

(முற்றும்)

2. யாருக்கு கூறப்பட்டது?
3. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
4. இங்கு 'இருநிதிக் கிழவன்' எனக் குறிப்பிடப்படுபவன் யார்?

❖ **செய்யுளுக்கு உரை எழுதல்**

⇨ பின்வரும் செய்யுளின் பொருளை இக்கால உரையில் எழுதி அதில் உள்ள தடித்த தொடர் சிறப்பினை எழுதுக.

ஆளும் நாயகர் அன்பர் ஆனவர் அளவிலார் உளம் மகிழவே
நாளும் நாளும் நிறைந்து வந்து நுகர்ந்த தன்மையின் நன்மையால்
நீளும் மாநிதியின் பரப்பு நெருங்கு செல்வம் நிலாவி எண்
தோளினார் அளகைக்கிருத்திய தோழனாரென வாழுநாள்

❖ **சந்தர்ப்பம் கூறல்**

"மற்றொன்றுங் காண்கிலேன்
ஏதிலாரும் இனித் தருவாரில்லை
போதும் வைகிற்றுப் போம் மிடம் வேறில்லை
தீது செய்வினை யேற்கென் செயல்"

1. இக்கூற்று இடம்பெறும் நூல் எது?
2. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
3. யாருக்கு கூறப்பட்டது?
4. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

❖ **செய்யுளுக்கு உரை எழுதல்**

⇨ பின்வரும் செய்யுளை இக்கால உரைநடையில் எழுதி அதில் உள்ள தடித்த தொடர் சிறப்பினை எழுதுக.

மாலயற் கரிய நாதன் வடிவொரு சோதியாகச்
சாலவே மயங்கு வார்க்குச் சங்கரன் தான்ம கிழ்ந்தே
ஏவலார் குழலாள் தன்னோடிடபவா கனனாய்த் தோன்றிச்
சீலமார் பூசை செய்த திருத்தொண்டர் தம்மை நோக்கி

❖ **வினா**

⇨ இளையான்குடி மாறநாயனாருடைய மனைவியாரின் விருந்தோம்பற் பண்பு பற்றி விளக்குக.

## நமறூது அழிவுண்ட படலம்

❖ **செய்யுளுக்கு உரை எழுதல்**

⇨ பின்வரும் செய்யுளின் பொருளை இக்கால உரையில் எழுதி அதில் தடித்த தொடரின் சிறப்பினை எழுதுக.

செயத்தகா மேன்மை வேண்டிச் சேணடைந்துள்ள நொந்து
பயத்தொடும் பயத்திற் சிக்கி பாடுபட் டெழுந்து மன்ன
னயத்திடை யுற்ற நீதி னழுங்கினன் மணிப்பீடத்தின்
வயக்களிறுண்ட வெள்ளிற் கனியென மாள்கிருந்தான்.

❖ **வினா**

⇨ நமுறூதும் அவனது படையினரும் கொசுப்படையின் தாக்குதலால் நிலை குலைந்து தோற்றுப் போனமை சித்திரிக்கப்பட்டிருக்கும் முறையினை விவரிக்க.

❖ **வினா**

⇨ போருக்கெழுந்து நமுறூதின் படைகளும் இபுறாஹீம் நபி அவர்களின் படை அணியினரும் நமுறூது அழிவுண்ட படலத்தில் வருணிக்கப்பட்டிருக்குமாற்றை விளக்குக.

❖ **செய்யுளுக்கு உரை எழுதல்**

⇨ பின்வரும் செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி அதில் உள்ள தடித்த தொடர் சிறப்பினை எழுதுக.

வானக மறைத்த நீண்ட வன்கொடி குடை மறைத்த
மானவர் பாத நுண்டு சீருடர மறைப்பச் கையி
னூனகு குந்தங் கட்கமோ டம்பு பாலந்
தாறகு சுதிர்க டோற்றக் தளத்தணி சென்ற தன்றே

❖ வினா

⇨ நமறூது மன்னனின் குணவியல்புகளை விளக்குக.

## குருதரிசனப்பாடல்

❖ **சந்தர்ப்பம் கூறல்**

"யாரை நீ யவலிக் கின்றனை
பெருகுமித் துயருகக் குற்ற பெற்றி யென்
திருகலில் சிந்தையாய் செப்புக"

1. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2. 'திருகலில் சிந்தையாய்' என்ற தொடர் யாரைக் குறிக்கின்றது?
3. 'இத்துயருகக்குற்ற பெற்றியென்' இதனை உமது மொழி நடையில் இலகுபடுத்தி எழுதுக?
4. 'செப்புக' என்பதன் கருத்தை எழுதுக?

❖ **சந்தர்ப்பம் கூறல்**

"ஆதியான் நிருதக ஏடுக்குக் ஜீவநற்
பாகை நீ யறிதியோ பகர்தி ..."

1. இக்கூற்று இடம் பெறும் நூல் எது?
2. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
3. யாருக்கு கூறப்பட்டது?
4. 'ஜீவநற்பாகை' என்பது என்ன?

❖ **செய்யுளுக்கு உரை எழுதல்**

⇨ பின்வரும் செய்யுளை இக்கால உரைநடையில் எழுதி அதில் உள்ள தடித்த தொடர் சிறப்பை எழுதுக.

ஆயிடைக் கருணை வேந் தானை மீறிய
தீயரைத் தீச் சிறைப்படுத்தல் திண்ணமென்
றேயுறச் சுருதிநா லியம்புகின்றதை
ஆயவிர் துயர்க்கட லிமிழ்ந்தி னேனரோ

❖ **வினா**

⇨ ஆத்தம விசாரியின் துன்பத்திற்கான காரணத்தை சுவிசேசகன் வினவிய பொழுது, ஆத்தம விசாரி கூறிய பதிலை எழுதுக.

⇨ அப்பதிலில் இருந்து ஆத்தம விசாரியினது குணாதிசயங்கள் பற்றி நீங்கள் கருதுபவற்றைத் தெளிவுபடுத்துக.

## நீதிப்பாடல்

❖ **செய்யுளுக்கு உரை எழுதுக.**

⇨ பின்வரும் செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி அதில் தடித்த தொடரில் உள்ள சிறப்பினை எழுதுக.

அட்டாலும் பால் சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன் மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்

நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப் போற் காணுமே அல்லாத
ஈரமிலா நெஞ்சத் தார்க் கீந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர்

கவையாகி கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் சபை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறியா
மாட்டாதவன் நன்மரம்

❖ **வினா**

⇨ மூதுரையில் நல்லார் பற்றி ஒளவையார் கூறியவை யாவையென விளக்குக.

## கடலை நம்பி

❖ **செய்யுளுக்கு உரை எழுதல்**

⇨ பின்வரும் செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி அதில் தடித்த தொடர் சிறப்பினையும் எழுதுக.

வெறுவான வெளி மீது மழைவந்து சீறும்
வெறிகொண்ட புயல் நின்று கரகங்கள் ஆடும்
நெறிமாற படநூறு சுழி வந்து குழும்
நிலையான தரை நீரில் இலை போல ஈடாடும்

(தொடரும்....)

**ப. மாறன்**






# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004


❖ மிகப்பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.

1. ஒரு பாடசாலை இலச்சினையில் காணப்படாத ஒரு வாக்கு
(1) சுத்தமாக வாழ் (2) உண்மை பேசுதே (3) பொய் பேசாதே (4) பிழைகளைத்திருத்து
2. தீர்ப்பு வழங்குபவர் எப்போதும் வகிக்க வேண்டியது
(1) பக்கசார்பு (2) நடுநிலை (3) தலைமை (4) நீதிபதி
3. வானொலியில் செய்தி வாசிக்கப்படும்போது முதலில் வாசிக்கப்படுவது
(1) சாராம்சம் (2) தலைப்புச் செய்தி (3) வானிலை (4) விளம்பரம்
4. குழந்தை ஒன்றை நித்திரைசெய்ய பாடப்படும் பாடல்
(1) தாலாட்டு (2) மீனவப் பாடல் (3) சோகப் பாடல் (4) விளையாட்டுப் பாடல்
5. பூதவுடலைக்கொண்டு செல்லப்படுவதை உணர்த்துவது
(1) சங்கு ஒலி (2) பறைமுழக்கம் (3) வாகன ஊதி (4) சைக்கிள் மணி
6. பரீட்சைப் பெறுபேறுகளை உடனே அறிய உதவும் சாதனம்
(1) இணையம் (2) வானொலி (3) தொலைநகல் (4) மின்னஞ்சல்
7. இலங்கை அரசுக்குச் சொந்தமான தொலைக்காட்சிச்சேவை
(1) சுவர்ணவாஹினி (2) ரூபவாஹினி (3) சிரச (4) சக்தி
8. ஒரு நாளைக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்திகள் ஒலிபரப்பாகும் தடவைகள்
(1) நான்கு (2) மூன்று (3) இரண்டு (4) ஒன்று
9. பின்வரும் பத்திரிகைகளில் அரசாங்க வெளியீடாக விளங்குவது எது?
(1) வீரகேசரி (2) சுடர்ஒளி (3) தினக்குரல் (4) தினகரன்
10. களனி கங்கையின் பழைய பெயர்
(1) கதம்ப நதி (2) கல்யாணி நதி (3) கோகண்ண (4) மாதோட்டம்
11. வேதவனராமய என்ற புத்த விகாரையை கட்டுவித்த மன்னன்
(1) பராக்கிரமபாகு (2) துட்டகைமுனு (3) மகாசேனன் (4) எல்லாளன்
12. சார்க் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளின் எண்ணிக்கை
(1) ஆறு (2) ஏழு (3) எட்டு (4) ஐந்து
13. வங்காளதேசத்தின் தலைநகரம்
(1) திம்பு (2) காட்மண்டு (3) டாக்கா (4) மலே
14. உலகில் சனத்தொகை கூடிய நாடு
(1) ரஸ்யா (2) இந்தியா (3) சீனா (4) அமெரிக்கா
15. புனித வெள்ளரச மரம் நாட்டப்பட்டுள்ள நகரம்
(1) பொலநறுவை (2) தம்புள்ள (3) அநுராதபுரம் (4) சீகிரியா


❖ கீழ் காட்டப்பட்டுள்ள படங்களின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.



1( (..........) (..........) (..........)



❖ பின்வரும் படங்களின் பெயர்களைச் சிங்களத்தில் எழுதுக



22. (..........) 23 (. 24 (.
2 26. 27 (..........)


"அ" பகுதிக்குப் பொருத்தமானதை "ஆ" பகுதியில் தெரிந்து அதன் இலக்கத்தை "அ" அடைப்புக்குறியினுள் எழுதுக.

| "அ" | | "ஆ" |
|---|---|---|
| 28. நீர்மட்டம் | (.....) | தையல்காரர் |
| 29. அம்மி | (.....) | தச்சன் |
| 30. ஏர் | (.....) | கொத்தன் |
| 31. சீவுளி | (.....) | உழவன் |
| 32. கத்தரிக்கோல் | (.....) | சமையற்காரன் |

கீழ்க்காணப்படும் அட்டவணையை அவதானித்து விடை தருக.


| | P | Q | R | S |
|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | பெருங்காடி | பனிக்காடு | யூரிகாரின் |
| 2 | விணை | கண்டி | கிராமம் | சிவப்பு |
| 3 | வண்டல் | கரையோரம் | மாவட்டம் | வட்டவளை |
| 4 | நீல்ஆம்ஸ் ரோங் | சந்திர கிரகணம் | புல்லாங் குழல் | பச்சை |

33. இலங்கையில் அதிகூடிய மழைவீழ்ச்சியுள்ள இடம் ..........
34. சனத்தொகை கூடிய சிறிய மாவட்டம் ..........
35. விண்வெளிக்குச் சென்ற முதல் வீரர் ..........
36. இரவு வானில் வடக்கு வானில் தோன்றும் உடுக்கூட்டம் ..........
37. உலகில் துருவ (முனை)ப் பகுதியில் வாழும் மிருகம் ..........
38. நெற்பயிர் செழித்து வளரும் வயல் மண் ..........
39. பின்வருவனவற்றின் பெயர்களை எழுதுக.



1. (..........) 2 (..........)
3. (..........) 4. (..........)

❊ கீழே தரப்பட்டுள்ள கடிகாரங்கள் காட்டும் நேரத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக



(..................) (..................) (..................)

❊ கீழே தரப்பட்டுள்ள படர் கொடியின் பெயரைத் தருக.



(............................)

❊ கீழ் வரும் பாடலை வாசித்து இல. 1 முதல் 5 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

"பொட்டுப்பொட்டா கையெழுத்தாம்
பொன்பதிச்ச பேனாவாம்
ஆதரிச்சு பேரு போடும்
ஐயா கணக்கப்பிள்ளை"

1. இங்கு பொட்டுப் பொட்டாக உள்ளது எது?

..............................................................................

2. ஆதரிச்சு பேரு போடுபவர் யார்?

..............................................................................

3. பேனாவில் என்ன பதிக்கப்பட்டுள்ளது?

..............................................................................

4. பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக?

..............................................................................

5. இப்பாடலில் உள்ள அடுக்குத்தொடர் ஒன்றை எழுதுக.

..............................................................................


❊ கீழ் வரும் ஒவ்வொரு படத்திலும் காட்டப்படுபவைகளுக்குரிய ஆங்கில எழுத்துக்களை உபயோகித்து) படத்தின் கீழே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. 2. 3. 4.



.......... .......... .......... ..........

❊ பின்வரும் குறியீடுகள் உணர்த்தும் பொருளை எழுதுக.




................ ................

❊ கீழ்வரும் ஒவ்வொரு கூற்றும் சரியாயின் ( √ ) என்றும், பிழையாயின் (X) என்றும் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

i. சதுரமொன்றின் சுற்றளவு ஒரு பக்க நீளம் x 4 ஆகும். (......)
ii. ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா வைரவிழா (......)
iii. தையல் வகைகளில் சோம் தையலும் ஒன்றாகும். (......)
iv. 200 மீற்றர் ஓட்டம் ஒரு மைதான நிகழ்ச்சியாகும். (......)
v. கனவுருவொன்றிற்கு ஆறு முகங்கள் உண்டு. (......)
vi. தலதா மாளிகை அமைந்துள்ள நகரம் கண்டி. (......)
vii. இலங்கையின் பிரதான இயற்கைத் துறைமுகம் கொழும்பு (....)
viii. தாழை சதுப்பு நிலத் தாவரமாகும். (....)
ix. அசுத்த நீரும் உணவும் எமது வளர்ச்சிக்கு உதவும் (....)
x. பூச்சிகொல்லி பாவனையால் மக்களுக்கு தீங்கு ஏற்படாது (....)

❊ கீழேயுள்ள அட்டவணையில் முதலாவது கூட்டில் காணப்பட்டுள்ள சம்பவங்களினால் ஏற்படுகின்ற பெறுபேறுகளை மூன்றாவது கூட்டில் காட்டப்பட்டுள்ள பொருத்தமான விடை இலக்கத்தை தெரிவு செய்து, இரண்டாவது கூட்டில் எழுதுக.

| சம்பவம் (கூடு) | சரியான விடைக் குரிய இலக்கம் (கூடு 2) | பெறுபேறுகள் (கூடு 3) |
|---|---|---|
| i. கிராமத்தில் ஏற்படும் சிறு சச்சரவுகளை தீர்த்து வைத்தல் | ............ | 1. கூட்டுறவுச்சங்கம் |
| ii. மாவட்ட நிர்வாகத்திற்கு பொறுப்பானவர். | ............ | 2. கிராமசேவகர் |
| iii. தொற்றுநோய்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் | ............ | 3. பொதுசன சுகாதார சேவகர் |
| iv. வருமானங் குறைந்த குடும்பங்களுக்கு உதவி நிதி பெற்றுக்கொடுத்தல் | ............ | 4. அரசாங்க அதிபர் |
| v. மக்களுக்குத் தேவையான பொருட்களை சகாய விலையில் பெற்றுக்கொள்ளல். | ............ | 5. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் |
| vi. பாடசாலையில் நடைபெறும் வைபவங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல். | ............ | 6. சமுர்த்தி முகவர் |

❊ கீழ்வரும் ஒவ்வொரு சொல்லிலுமுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான எழுத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.



Oran......e H......n Ic......cream L......rry

❊ பின்வரும் வினாவிற்குச் சரியான விடை தருக.

i. முதலாவது சாக்கில் 495 தேசிக்காய்களும், இரண்டாவது சாக்கில் 216 தேசிக்காய்களும் உள்ளன. இரண்டு சாக்குகளிலுமுள்ள தேசிக்காய்கள் எத்தனை? ..............................

ii. 435 பக்கங்களையுடைய புத்தகம் ஒன்றை திங்கட்கிழமை 85 பக்கங்களையும், செவ்வாய்க்கிழமை 110 பக்கங்களையும், புதன்கிழமை 115 பக்கங்களையும் மீதியை வியாழக்கிழமையும் வாசித்தாரெனில் வியாழக்கிழமை எத்தனை பக்கங்களை வாசித்தார்?

..............................................................................

iii. ஒரு கடைக்காரன் ரூபா 3.50 வீதம் 15 முட்டைகளை வாங்கினான். அவற்றில் 3 முட்டைகள் பழுதாயின. மீதியை ஒன்று 4.50 வீதம் விற்றால் அவனுக்குக் கிடைக்கும் மொத்தலாபம் யாது?

..............................................................................

iv. சுஜித்தின் பிறந்த தினத்திற்கு வந்தவர்களுக்கு ஒருவருக்கு 4 ரொபிகள் வீதம் 300 ரொபிகள் பங்கிடப்பட்டன. பிறந்த தினத்திற்கு வந்தவர்கள் எத்தனை பேர்? ..............................

v. ஒரு தேயிலை வியாபாரி தான் வாங்கிய தேயிலையை 200 கிராம் வீதம் 35 பக்கற்றுகளில் அடைத்தார். அவர் வாங்கிய தேயிலை எத்தனை கிலோகிராம்? ..............................

**K.T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்**

இங்கே மடிக்கவும்



# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை -2004

## தமிழ்மொழியும் இலக்கியமும்

### அங்கதன் தூதுப்பாடல்

❖ **சந்தர்ப்பம் கூறல்**

⇨ "மாருதி அல்ல னாகில்
நீ எனும் மாற்றம் பெற்றேன்
ஆர் இனி என்னோடு ஒப்பார்?

1. இவ்வாறு தனக்குள் எண்ணியவன் யார்?
2. இவ் எண்ணத்தில் வெளிப்பட்டு நிற்கும் உணர்ச்சி யாது?
3. 'மாருதி' என்பது யாரைக் குறிக்கின்றது?
4. 'மாருதி அல்லனாகில் நீ எனும் மாற்றம் பெற்றேன்' என்ற இவ்வாக்கியத்தின் எழுவாய் யாது?

❖ **செய்யுளுக்குப் பொருள் எழுதுதல்**

⇨ பின்வரும் செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி அதில் தடித்த எழுத்திலுள்ள தொடரின் சிறப்பை விளக்குக.

அயில் கடந்(து) எரிய நோக்கும்
அரக்கரைக் கடக்க ஆழித்
துயில் கடந்(து) அயோத்தி வந்தான்
சொற்கடவாத தூதன்
வெயில் கடந்திலாத காவல்
மேருவின் மேலும் நீண்ட
எயில் கடந்(து) இலங்கை எய்தி
அரக்கன(து) இருக்கை புக்கான்:

❖ **வினா**

⇨ அங்கதன் தூதுப்படலத்தில் இராவணனது வீரம் இழித்துரைக்கப்பட்டிருக்கும் முறையினை விளக்குக.

❖ **செய்யுளுக்குப் பொருள் எழுதுதல்**

⇨ பின்வரும் செய்யுள்களை இக்கால உரையில் எழுதி அதில் தடித்து எழுத்துக்களில் உள்ள தொடரின் சிறப்பை எழுதுக.

அரக்கர் கோன் அதனைக் கேட்டான்
அழகிற்றே ஆகும்" என்றான்
குரங்கினைத் தலைவன் நின்றான்
கொற்றவருக்கு உற்ற(து) என்றான்
"இரக்கமது இழுக்கம்" என்றான்
இளையவன் இனி நாம் அம்பு
துரக்கவ(து) அல்லால் வே(று) ஓர்
சொல் உண்டோ? என்னச் சொன்னான்.

❖ **வினா**

⇨ "தன் தலைவனுக்கு விசுவாசமாக இருத்தல், சொல் வன்மை, துணிவுடமை இவை மூன்றும் தூதுவன் ஒருவனுக்குரிய இலட்சணங்களாகும். இவ் இலட்சணங்கள் யாவும் ஒருங்கே அமையப் பெற்றவன் அங்கதன் ஆவான்" இக்கூற்றின் பொருத்தத்தினை ஆராய்க.

❖ **சந்தர்ப்பம் கூறல்**

"உந்தை என் துணைவன் அன்றே
ஓங்கு அறம் சான்றும் உண்டால்
நிந்தனை இதன் மேல் உண்டோ
நீ அவன் தூதனானால்"

1. இக்கூற்று இடம் பெறும் நூல் எது?
2. யாருக்கு கூறப்பட்டது?
3. இங்கு "அவன்" எனக் குறிப்பிடப்படுபவன் யார்?
4. 'அறம் சான்றும் உண்டு' இத் தொடரின் பொருள் யாது?

❖ **செய்யுளுக்குப் பொருள் எழுதுதல்**

⇨ பின்வரும் செய்யுளை இக்கால உரையில் எழுதி அதில் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடரின் சிறப்பை எழுதுக.

நல்லை நல்லை அறச்சமர்த்தி நீயே கண்டேன்
நன்னுதலார் அனைவரிலும் இந்திரசாலம்
வல்லை வல்லை விறகுகளும் களவே செம்பொன்
மங்கல நாண் உன் கழுத்தில் இருக்க ஏதும்
இல்லை எனச் சொல்வது சற்றும் ஏலாது
இதனை எனக்கு ஈவாய் என்று இயம்ப வேடர்
பல்லம் உயிர் நிலைவாயில் பட்ட மான் போல்
பதை பதைத்து பைந்தொடியாள் பதறி வீழ்ந்தாள்

⇨ 'கையினில் உலக்கை பற்றிக் காந்தளின் உதிரம் பாய
மெய்யினில் வியர் நீர் சிந்த விழியினில் அருவி பாய
நெய்யினில் முடித்த கூந்தல் நெல் குத்தும் கொடுமை காணா
மையினில் திகழ்வேல் கண்ணார் அரம்பையர் மறுகிச் சோர்ந்தார்.

❖ **வினா**

⇨ சந்திர மதியின் பரிதாப நிலையும் அரிச்சந்திரனின் சத்தியம் தவறாமையும் அவர்கள் இருவருக்கும் இடையே இடம்பெற்ற உரையாடலிலிருந்து புலப்படுமாறு விளக்குக.

❖ **சந்தர்ப்பம் கூறல**

"........... தர உரிய பொருள் எனக்கு தராத நீ தனியே
இப்பனியிருளில் சவம் கொணர்ந்து கரவின் அழல் சுடுவது
உனக்கு அடைவோ"

1. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2. யாருக்கு கூறப்பட்டது?
3. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
4. 'தர உரிய பொருள்' எனக் குறிப்பிடப்படுபவை எவை?

❖ **செய்யுளுக்கு உரை எழுதுதல்**

⇨ பின்வரும் செய்யுளுக்கு பொருளை எழுதி அதில் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடரின் சிறப்பை
எழுதுக.

அலைவு இலா அரிச் சந்திரனிற்கு அல்லது
தொலைவில் யாவர்க்கும் தோற்றரு மங்கலம்
புலையன் காணவும் போது வதோ? என
உலையின் மீது மெழுகொத்து உருகினாள்.

### இளையான் குடிமாறநாயனார் புராணம்

❖ **செய்யுளுக்கு பொருள் எழுதல்**

⇨ பின்வரும் செய்யுளின் பொருளை இக்கால உரை நடையில் எழுதி அதில் தடித்த தொடர் சிறப்பினை எழுதுக.

இப்பரி சிவர்க்குத் தக்க வகையினால் இன்பம் நல்கி
முப்புரஞ் செற்றார் அன்பர் முன்பெழுந் தருளிப் போனார்
அப்பெரியவர்தந் தூய அடியினை தலைமேற் கொண்டு
மெய் பொருட் சேதி வேந்தன் செயலினை விளம்பலுற்றேன்.

❖ **வினா**

⇨ இளையான்குடி மாறநாயனார், சிவனடியார்களை உபசரிப்பதில் வல்லவர் என்பது எடுத்துரைக்கப்பட்டிருக்கும் வகையினை விளக்குக.

❖ **சந்தர்ப்பம் கூறல்**

⇨ "......... அன்பர் பூசை அளித்த நீ அணங்கினோடும்
என் பெரும் உலகை எய்தி இரு நிதிக் கிழவன் தானே
முன்பெரும் நிதியம் ஏந்தி மொழிவழி ஏவல் கேட்ப
இன்பமார்ந்திருக்க.........."

1. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?

# வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் திலீபன் நினைவுதினம் அனுஷ்டிப்பு

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் தியாகி திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவுதினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிககப்படுகின்றது. பாடசாலைகள், பொதுநிறுவனங்கள், மற்றும் வர்த்தக நிறுவனங்கள் யாவும் சிவப்பு, மஞ்சள் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டிருப்பதுடன், பல இடங்களில் பந்தல்கள் அமைக்கப்பட்டு தியாகி திலீபனின் திருவுருவப் படம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது.

பாடசாலைகளில் ஒவ்வொரு நாளும் தமிழழத் தேசியக் கொடி ஏற்றபபட்டு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் உரைகளும் இடம்பெறுகின்றன. செம்பியன்பற்று அ.த.க பாடசாலை, மருதங்கேணி இ.த.க பாடசாலை ஆகியவற்றில் அடையாள உண்ணாவிரதங்கள் நடைபெற்றன. இறுதிநாளன்று உடுத்துறை மகா வித்தியாலயத்தில் உண்ணாவிரதம் நடைபெறவுள்ளதுடன் மாணவர்கள், ஆசிரியர்களது கவிதைகளும், பேச்சுக்களும் இடம்பெறவுள்ளன. (122)

## ஜப்பானியத் தூதரக அதிகாரி தொழில்நுட்பக் கல்லூரிக்கு விஜயம்

இலங்கைக்கான ஜப்பான் தூதரகத்தின பிரதம ஆலோசகர் தனகூரே நேற்றுமுன்தினம் யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு விஜயம்செய்தார்.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியைத் தரமுயர்த்துவதற்கும், அதன் வளங்களைப் பெருக்குவதற்குமாக ஜபபான் நாட்டு நிறுவனத்தின் உதவியுடன் ஐந்து மில்லியன் ரூபாவை வழங்குவதற்கான முதற்கட்ட நடவடிக்கையாகவே அவர் இங்கு வந்துள்ளார்.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் என்.யோகராஜனின் வேண்டுகோளுக்கிணங்கவே அவர் இங்கு வந்துசென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி தரமுயர்த்தப்பட்டால், யாழ்ப்பாணத்தில் மூன்று இடங்களில் தொழில்நுடபக் கல்லூரிகள் நிறுவப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சரிந்து விழும் நிலையில் மின்கம்பங்கள் போக்குவரத்துக்குப் பெரும் அச்சுறுத்தல்

(வேலணை)

மண்கும்பான் மற்றும் சாட்டிப் பகுதியில் உள்ள மின்கம்பங்கள் சரிந்துவிழும் நிலையில் உள்ளதால் போக்குவரத்தில் பெரும் அபாய நிலை தோன்றியுள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள வீதிகளின் குறுக்காகச் செல்லும் மின் கம்பிகளுடன், மின் கம்பங்கள் சரிந்துள்ளதால் மிகவும் பதிவாகக் காணபடுகினறன. இதனால் இந்த வீதி யால் செல்லும் வாகனங்கள் அபாயத்தின் மத்தியிலேயே பயணிக்க வேண்டியுள்ளது.

இதேவேளை சாட்டி மாதா ஆலய திருவிழாவை ஒட்டி இந்த வீதியால் விசேட பஸ சேவைகள் நடத்தப்பட்ட போது மின்கம்பிகள் பதிவாக இருந்ததால் சிரமத்தின் மத்தியிலேயே பயணித்ததைக் காணமுடிந்தது.

எனவே இது தொடர்பாக மின்சார சபையினா் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனா். (99)

## தென்மராட்சியில் கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை!

தென்மராட்சிப் பகுதியில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காலபோக நெற்செய்கை, சிறுதானியப் பயிர்ச்செய்கை, மேட்டுநிலப் பயிர்ச்செய்கை என்பவற்றில் ஈடுபடும் விவசாயிகளது நலனைக் கருத்தில்கொண்டு, சாவகச்சேரி கமநல நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

இதன்படி கடந்த 15 ஆம் திகதி முதல் அடுத்தவருடம் ஜூன் மாதம் 30 ஆம் திகதிவரையான காலப் பகுதியில் தங்களது வளர்ப்பு விலங்களைக் கட்டிவளர்க்குமா றும், மீறிக் கட்டாக்காலிகளாகத் திரியும் ஆடு, மாடுகள் தங்களால் அங்கீகரிக்கப்பட்ட பிடிகாரர்களால் பிடிக்கப்பட்டு தண்டப்பணம் அறவிடப்படும் எனவும், உரிமை கோரப்படாத மாடுகள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## பஸ் தரிப்பிடம் இன்றி மக்கள் பெரும் சிரமம்

(வேலணை)

மண்கும்பான் பகுதியில் பஸ் தரிப்பிடம் இன்றி மக்கள் பெரும் அவலங்களை எதிர்கொள்கின்றனா்.

இந்தப் பிரதேச மக்கள் நீண்ட தூரம் நடந்துவந்தே பஸ்சேவையைப் பெறவேண்டி இருப்பதுடன், இந்த வீதியில் பஸ் தரிப்பிடம் இன்மையால் கடும் வெயிலின் மத்தியிலும், மழையின் மத்தியிலும் பஸ்ஸிற்கு காத்திருக்கவேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தவீதி தரவைப் பிரதேசத்தின் ஊடாக அமைந்திருப்பதால் மழைக்கு ஒதுங்க வேறு இடம் இல்லாது இருப்பதாகவும், இந்தப் பகுதி மக்கள அமைத்திருந்த சிறிய தகரப் பந்தலும முற்றுமுழுதாகச் சேதமுற்று உள்ளதால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டி உள்ளதாகவும், இது தொடர்பாக உரியதரப்பினா் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும இந்தப் பிரதேச மக்கள் தெரிவித்தனா். (99)



யாழ்.பல்கலைக்கழகத்தில் வெளி ஊழியர்களைக்கொண்டு பரீட்சைகளை நடத்துவதற்கான ஒழுங்கில் ஈடுபட்டபோது, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மருத்துவபீடத்துக்கு முன்னாள் ஊழியர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

### நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

நெடுந்தீவு பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை காலை 11 மணிக்கு நெடுந்தீவு பிரதேச செயலக மண்டபத்தில் உதவி பிரதேச செயலாளர் எம்.பற்றிக் நிரஞ்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நெடுந்தீவின் அபிவிருத்தி, போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், மின் விநியோகம் குடிநீர் விநியோகம் மற்றும் உலருணவு நிவாரண விநியோகம் எனபன தொடர்பாகவும் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

### கரையோர மீன்பிடி தொடர்பாக பயிற்சி வழங்க ஆலோசனை

உலக உணவுத் திட்டத்தின் ஏற்பாட்டில் குடாநாட்டைச் சேர்ந்த மீனவர்கள் மூவருக்கு கரையோர மீன்பிடி தொடர்பாகப் பயிற்சிகள் வழங்க ஆலோசிக்கப்பட்டு வருவதாக நீரியல் வளத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்குப் பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்படும் மூன்று மீனவர்களுக்கே இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாகவும் கூறிய அவர், வெளிநாடு ஒன்றிற்குக் கூட்டிச்சென்று அங்கு வைத்தே மீன்பிடி மற்றும் மீன்பிடி படகுகள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார் (14)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ஸ்ரீ.சௌந்தர்யா
முகவரி : இணுவில்

இரண்டாவது அகவையில்



பெயர் : செ.கௌசிகன்
முகவரி : புலோலி தென்மேற்கு கூவில்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------
முகவரி :------------------
பிறந்த ஆண்டு:------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றோர் ஒப்பம்





யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற பவளவிழா நடைபவனியின் காட்சிகளிலிருந்து...

## வடமராட்சி கிழக்கு மக்களுக்கு நுளம்பு வலைகள் அன்பளிப்பு

வடமராட்சி கிழக்குப் பிரதேச கிராமங்களிலுள்ள சகல மக்களுக்கும் நுளம்புவலைகள் வழங்கும் நடவடிக்கைகள் நடைபெற்றுவருகின்றன.

பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக 306 பி யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம் சுமார் 2 ஆயிரத்து 500 நுளம்பு வலைகளை வழங்கியுள்ளது. செம்பியன் பற்று, உடுத்துறைப்பகுதி சுகாதார பரிசோதகர்கள், சுகாதாரத் தொண்டர்களின் உதவியுடன் நுளம்புவலைகளை வழங்கிவருகின்றனர்.

நுளம்புவலைகள் போதாத இடத்தில் மேலும் நுளம்புவலைகள் பெற்று சகலருக்கும் வழங்கப்படுமென செம்பியன்பற்று சுகாதார பரிசோதகர் எஸ்.நாகேந்திரம் தெரிவித்தார். (21)

## வடமராட்சிக் கோட்ட மகளிர் சங்கம நிகழ்வு!

வடமராட்சிக் கோட்ட மகளிர் சங்கம நிகழ்வு கடந்த சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நெல்லியடி முருகமூர்த்தி மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. வடமராட்சிக் கோட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பு தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

பொதுச் சுடரை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் துரை. சத்தியசீலன், வடமராட்சிக் கோட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் தயா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தேசியக் கொடியை யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றி வைத்தார். தொடர்ந்து இரண்டாம் லெப் மாலதியின் திருவுருவப் படத்திற்கு மாவீரர்களின் சகோதரி விஜயகுமாரி ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார். கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் திருவுருவப்படத்திற்கு கடற்கரும்புலி கப்டன் அன்புமலரின் தாயார் ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார். (14)

## தென்மராட்சி பிரதேச செயலகம் இரண்டு பிரிவுகளாக்கப்படும்?

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகம் விரைவில் இரண்டாகப் பிரிக்கப்பட்டு கொடிகாமத்தில் ஒரு உதவி அரச அதிபர் பிரிவு உருவாகும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் முதற்கட்டமாக தற்போது மாதத்தில் இரண்டு நாட்கள் மட்டும் இயங்கும் கொடிகாமம் உப அலுவலகத்தை வரும் முதலாம் திகதி முதல் ஒவ்வொரு நாளும் இயங்க வைத்து பின்னா் பெரும்பாலும் 2005 ஜனவரிமுதல் புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவாகப் பிரகடனப் படுத்தப்படும் எனவும் தெரியவருகிறது.

கொடிகாமம் உப அலுவலகத்துக்கு தற்போது உதவிப் பிரதேச செயலராகப் பதவியேற்றுள்ள தேவநந்தினி பாபு பொறுப்பாக இருப்பாரெனவும் - மாவட்டச் செயலக, பிரதேச செயலக வட்டாரங்களிலிருந்து அறியமுடிகிறது.

இன்னும் இந்தச் செய்திகள் எவையும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. (24)

### சுன்னாகம் பிரதேச சபைக்கு முதலாமிடம்

(மானிப்பாய்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டியில் சுன்னாகம் பிரதேசபை, முகாமைத்துவப் போட்டியில் முதலாமிடத்தில் தெரிவுசெய்யப்பட்டு மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது. (101)

நாகர்கோவில் விமானத்தாக்குதல் நினைவாக...

– அஸ்மிதா

# ஆறாத ரணங்களும்..., மாறாத் துயரமுமாய்..., இன்னமும் இதயத்தை என்னமோ செய்கிறது...!

நாகர்கோவில் மகாவித்தியாலயத்தின் மீது புக்காரா விமானங்கள் குண்டு வீசியதில் 20 மாணவர்கள் உடல் சிதறி கொடூரமாக கொல்லப்பட்ட நினைவு தினம் இன்று இந்தப் பாடசாலையில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

1995 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த விமானக் குண்டு வீச்சில் பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்த 20 மாணவர்கள் பலியாகினர். பல மாணவர்கள் அவயவங்களை இழந்துள்ளனர். பொதுமக்கள் 10 இற்கும் மேற்பட்டோர் இறந்தனர். பலர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

அன்றைய தினம் பாடசாலைக்குச் சென்ற தமது பிள்ளைகள் எப்போது வீடு வருவார்கள் என்று எதிர்பார்த்திருந்த வேளையிலே... நண்பகல் 12 மணியளவில் திடீரென்று பேரிரைச்சலுடன் வந்த புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் அடுத்தடுத்து பாடசாலையின் மீது குண்டுகளை வீசின.

எங்கும் புகை மண்டலம். ஒருவரை ஒருவர் தெரியவில்லை. ஒரே அவலக்குரல் சத்தங்கள் கேட்ட வண்ணமே இருந்தது. இரைச்சல் சத்தம் ஓய்கின்றது. பெற்றோர்கள் அலறி அடித்துக் கொண்டு பாடசாலையை நோக்கி ஓடுகின்றார்கள். அங்கு தமது பிள்ளைகளை இரத்த வெள்ளத்தில் கண்ட பெற்றோர்கள் கதறி அழுகின்றார்கள். வர்ணிக்க முடியாத அவலநிலை.

எங்கும் ஒரே இரத்த வெள்ளம், குடல் சிதறிய நிலையில் சடலங்கள், தலை இல்லாத சடலங்கள், கால், கை அவயவங்கள் இல்லாத நிலையில் தசைப் பிண்டங்கள். ஐயோ! இதென்ன காட்சி. பெற்றோர்கள் உருண்டு புரழ்கின்றார்கள். அயல் வீடுகளில் உள்ளவர்களும் இறந்தும், படுகாயமடைந்தும் காணபட்டனர்.

மர நிழல்களின் கீழ் பாதுகாப்புத் தேடி படுத்திருந்த சின்னஞ்சிறுசுகள் தலை சிதறுண்டு கிடந்தனர். எதிர்காலமே என்னவென்று தெரியாத அந்தப் பிஞ்சு மாணவர்களுக்கு, ஏன இந்த நிலைமை. பாடசாலை என்று தெரிந்து கொண்டு பாதகர்கள் குண்டுகளை வீசியதாலேயே இந்தப் பரிதாபநிலை. யாரை யார் பார்ப்பது யாருககு யார் ஆறுதல் கூறுவது, அந்தக் கிராமமே ஓலமிடுகின்றது.

காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு வாகன வசதிகள் இல்லை. இரத்தப் பெருக்குகளால் பலர் இறந்தார்கள். என்னத்தைச் சொல்வது, எதைச் செய்வது எனத் தெரியாமல் தளர்ந்துபோன அந்தப் பெற்றோரின் நிலை சொல்லில் அடங்காது.

அந்தப் பாடசாலையின் அபிவிருத்திச்சங்கச் செயலாளர் நா.நேசரத்தினம் இந்தச் சம்பவம் பற்றிக் குறிப்பிடுகையில்-

கடல் வளமும், வயல் நிலமும் சிறப்புற்று விளங்கும் இந்த நாகர்கோவில் கிராமம் பண்டைக்கால வரலாற்றைக் கொண்டது. சரித்திரப் புகழ்பெற்ற பூர்வீக நாகதம்பிரான் ஆலயம் இங்கேயே அமைந்துள்ளது. 520 குடும்பங்களைக் கொண்ட இந்தக் கிராமம் வந்தாரை வரவேற்ற சிறப்பான கிராமமாகும்.

கடந்த 1990, 1991 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடந்த போர் அனர்த்தங்களால் மயிலிட்டி, பலாலி, காங்கேசன்துறை, வெற்றிலைக்கேணி, ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன் மற்றும் திருகோணமலையிலிருந்து வந்த இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு ஆதரவு கொடுத்தது இந்த நாகர்கோவில் கிராமமாகும்.

சுமார் 800 பிள்ளைகளுக்கு மேல கல்வி கற்ற இந்தப் பாடசாலையில் இந்த அகோர நிகழ்வு. இந்தச் சம்பவத்தை உடம்பில் உயிர் உள்ள வரை எம்மால் மறக்கமுடியாது. காயப்பட்டவர்களை வைத்தியசாலைகு வாகனங்களில் கொண்டு சென்றோம். வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் சில மாணவர்கள் உயிர் இழந்தனர்.

மந்திகை வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பலரை கொண்டு சென்றோம். பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் உதவி செய்தார்கள். வைத்தியசாலைகளில் ஊழியர்களும், வைத்தியர்களும், நலன்விரும்பிகளும் காட்டிய ஆர்வமும் அக்கறையும், இரக்கமும் எங்களால் மறக்க முடியாதவை. எமது பாடசாலை அதிபர் பைத்தியம் பிடித்தவர் போல் ஆகிவிட்டார். ஆசிரியர்களும் நிலை தடுமாறிய நிலையில் காணப்பட்டனர்.

வைத்தியசாலையில் 15 மாணவர்களின் உடல்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. மூன்று மாணவர்கள் உயிருக்காக போராடிக் கொண்டிருந்தும் அவர்களைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. தசைப் பிண்டங்களாக இருந்த உடல்கள் இனம்காண முடியாதவாறு சாக்கில் கட்டப்பட்டிருந்தன. 50 இற்கும் மேற்பட்டவர்கள் காயப்பட்டிருந்தனர். அந்தக் கிராம மக்கள் இன்று உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம் பெயர்ந்துள்ளனர். பாடசாலையும் வசதிகள் அற்ற நிலையில் வடமராட்சியில் கிராமக் கோட்டுச் சந்தியில் இயங்கி வருகின்றது என மிகவும் வேதனையுடன் அவர் தெரிவித்தார்.

இந்தக் குண்டுவீச்சின் எதிரொலி இப்போதும் தொடர்ந்த வண்ணம் உள்ளது. இதில் காயப்பட்டோர் கை, கால் அவயங்களை இழந்தோர், பிள்ளைகளை இழந்த பெற்றோர், பெற்றோரை பறிகொடுத்த பிள்ளைகள், உடன் பிறப்புக்கள் படும் துன்பம் எண்ணில் அடங்காது. இந்தக் கிராம மக்கள் இடம்பெயர்ந்து வன்னியிலும், வடமராட்சியிலும் வாழ்கின்றார்கள்.

கற்கோவளம் புனித நகர் இடம் பெயர்ந்தோர் முகாமில் சுமார் 84 குடும்பங்கள் அமர்த்தப்பட்டுள்ளன. இந்தக்குண்டு வீச்சினால் பாதிக்கப்பட்ட பலர் இந்தமுகாமில் வசித்து வருகின்றார்கள். இந்தமுகாமில் தலைவராக இருக்கும் செல்வக்குமார் என்பவர் 1995 ஆம் ஆண்டு பாடசாலை மீது புக்காரா விமானங்கள் குண்டு வீசியபோது படுகாயமடைந்தவர். அப்போது பாடசாலையில் ஆறாம் வகுப்பில் கல்வி கற்றவர். இப்போது இவருக்கு 21 வயது, வலதுகாலில் தொடைப்பகுதியில் ஏற்பட்ட பெரியகாயம் காரணமாக பல மாதங்களாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தவர், இப்பவும் இவர் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கின்றார். பெரிதாக வேலை ஒன்றும் செய்யமுடியாது எனக் குறிபபிடும் அவர் - அன்றையதினம் தன்னுடன் கூடப்படித்த பலரின் மரணத்தை நினைத்து இப்போதும் கண்கலங்குகின்றார்.

இந்த அகதி முகாமில் வசித்து வரும் குடும்பப் பெண் ஜோன்சன் குயினதேவி (வயது 50) தெரிவிக்கையில்-

அன்றைய குண்டு வீச்சினால் எனது இருகால்களிலும், வயிற்றுப் பகுதியிலும் பாரிய காயங்கள் ஏற்பட்டன. எனது ஒரு வயதுக் குழந்தையும் பாதிக்கப்பட்டது. என்னைத் தப்பமுடியாது எனப் பலரும் நினைத்தார்கள். நாகதம்பிரான் திருவருளால உயிர் பிழைத்துள்ளேன். ஆனால் இன்றும் சிகிச்சை பெற்று வருகின்றேன் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த முகாமில் வசிக்கும் குகசரவணபவமலை (வயது 50) என்பவர் கூறுகையில்-

எனக்கு ஆறு பிள்ளைகள். எனது மூத்த மகள் தர்சினி. அப்போது ஏழாம் வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருக்கையில், பாதகர்களின் குண்டுவீச்சுக்கு இலக்காகி இறந்துள்ளார். இப்போது பிள்ளை இருந்திருக்குமாயின் திருமணக் கோலத்தில் பார்த்திருக்க முடியும். கொடுத்து வைக்கவில்லை என ஆதங்கப்பட்டார்.

பாடசாலை அதிபர் சி.மகேந்திரன் அன்று நடந்த சம்பவம் பற்றிக் கூறுகையில்-

அன்று வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி. பாடசாலை முகப்பு வாயிலில் சிட்டுக்கள் போன்ற மாணவர்களின் கூட்டம். ஆசிரியர்கள் ஒருபுறம், மாணவர்கள் ஒருபுறம். சமய ஆராதனை சிறப்பாக நடைபெற்றது. ஆசிரியர் நாகநாதனின் சொற்பொழிவும் இடம்பெற்றது. மாணவி உமாதேவி இனிய தமிழில் எல்லோரையும் கவரத்தக்க வகையில் உரையாற்றினாள். பாடசாலை இனிது ஆரம்பமானது.

12.30 மணிக்கு பாடசாலை இடைவேளை முடிந்து வகுப்புக்கள் ஆரம்பமாயிற்று. மாணவர் எண்ணிக்கை



880. வரவு 815. ஆசிரியர் எண்ணிக்கை 29. வரவு 26.

வாணி விழாவை வருடந்தோறும் சிறப்பாக கொண்டாடுவது போல இந்த வருடமும் அதனை நடாத்துவதற்கு இந்து சமய மன்ற ஆசிரியர்களை அதிபர் ஆரம்பப் பிரிவு அறைக்கு அழைத்து, பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட அந்தவேளையிலே, புக்காரா என்னும் கொடிய அரக்கன் சத்தம் கேட்டது. பாடசாலையில் இருந்து 1 கிலோமீற்றர் அப்பால் புக்காரா குண்டுச் சத்தம் கேட்டது. சில பெற்றோர் மாணவர்களை அழைக்க வந்தனர். கீழ்ப்பிரிவு மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறினர். ஆனால் அவர்கள் வீடுகளுக்குச் செல்லவில்லை. விமானச் சத்தம் கேட்ட மக்கள் மரங்களுக்குக் கீழேதான் ஒளிப்பார்கள். அதனால் மாணவர்கள் தமக்குப் பாதுகாப்பென பாடசாலைக்குப் பக்கத்தில் இருந்த இத்தி, புளி ஆகிய மரங்களுக்குக் கீழே இருந்தனர். அந்த வேளையில் பாடசாலைக்கு மேலாக பறந்த புக்காரா விமானங்கள் குண்டுகளை வீசின.

அந்தவேளையில், பாடசாலையில் உள்ளிருந்த மாணவர்களும், ஆசிரியர்களும் மேற்குப் புறமாக இருந்த காடுகளுக்குள் சென்று மரங்களுக்குக் கீழே இருந்தனர். மீண்டும் குண்டுகள் வீசப்பட்டன. எமக்கு அருகில் இருந்த மூன்று மாணவர்களையும் காப்பாற்றுவதற்காக பாடசாலை முன் வீதிக்கு வந்தோம். அப்போதுதான் புக்காராவின் கொடூரத்தனத்தைப் பார்க்க முடிந்தது. உடல் சிதறி, கால், கை இல்லாமல் உடலின் பகுதிகள் குண்டுச் சிதறலுக்குள் அகப்பட்ட 70 இற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கண்டோம். அவர்கள் அணிந்திருந்த வெண்ணிறச் சட்டை இரத்தத்தில் நனைந்திருந்தன. புத்தகப்பைகள் சிதறிக்கிடந்தன. ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளின் பெயரைக் கூறி தேடினர். எல்லோருடைய முகத்திலும் பயத்தின் பீதி காட்சியளித்தது. தமது பிள்ளைகளை இழந்த பெற்றோர்களும், உறவினர்களும், ஆசிரியர்ளும் சொல்லெணாத் துயரத்தில் அகபபட்டனர். மணல் ஏற்றுவதற்கு வந்த லொறி, மோட்டார் வண்டிகளில் வந்தவர்கள் காயப்பட்ட மாணவர்களை மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டுவந்தனர். புக்காரா எனும் கொடியவனின் வஞ்சகத்தனத்தால், இறந்த மாணவர்களின் உடல்கள் ஒரு புறத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. காயப்பட்ட மாணவர்கள் சத்திரசிகிச்சைக்கு உட்பட்டிருந்தனர்.

காலையிலே அழகாகப் பேசி தனது பேச்சால் எல்லோரையும் கவர்ந்த உமா, மாவட்ட மட்டத்திலே விளையாட்டு போட்டியிலே 5000 மீற்றர் ஓட்டத்திலே முதலிடத்தைப் பெற்ற காந்தன், 2ஆம் வகுப்பில் படிக்கும் அழகிய சிரிப்பைத் தவள விடும் தர்சினி, எதற்கும் பயந்து தொதுங்கும் 5 ஆம் வகுப்பில் படிக்கும் சகுந்தலா, வன்னியிலே படிப்பில்லை இங்கே தான் நல்ல கல்வி என 7 ஆம் வகுப்புக்கு வந்த உசேந்தினி.

எனக்கு எல்லாம் ஓடும் ஆனால் கணக்குத்தான் ஓடாது என்கின்ற கோபிதரன், நேரம் சென்றால் அதிபா அடிப்பார் என்று ஓடிவரும் அகிலா, குழந்தைத்தனம் தவழும் நாகலோயினி, தனது குறும்புத் தனத்தாலேயே எல்லோரையும் கவருகின்ற அமலவிஜி, கல்வியே கருத்தாகக் கொண்ட கணநாதன், பண்பின் சிகரமாம் பழனி, செல்லமாக விளையாடும் செந்திவேல், இவர்கள் எல்லாம் உயிரிழந்து சடலங்களாக காணப்பட்ட காட்சி எல்லோருடைய மனதையும் வெகுவாக உருக்கியது. ஒருமாத காலமாக நாகர்கோவிலே துக்கம் கொண்டாடியது. அன்று தொடக்கம் 6 மாத காலங்கள் பாடசாலைக்கு மாணவர்கள் வரமறுத்தனர். அவர்கள் உடைய மனதை ரணமாக்கிய அந்த நிகழ்வு இன்றுவரை எம்மைவிட்டு அகலவில்லை. அன்றுமுதல் இன்றுவரை உயிர்பெற்றெழுந்த நாகாகோவில் மகாவித்தியாலயம் இன்றும் தனது சொந்த இடத்துக்குச் செல்லமுடியாமல் தவிக்கிறது. □

## சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக வவுனியாவில் 56 முறைப்பாடுகள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களாக சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக, 56 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக வவுனியா மாவட்டத்தின் சிறுவர் பாதுகாப்புக் குழு தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்ட செயலகம் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில், பெரும்பாலான முறைப்பாடுகளில் பாலியல் துஷ்பிரயோகங்கள், துஷ்பிரயோகத்துக்கான முயற்சிகள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் இடம்பெயர்ந்து மக்கள் வாழும் நலன்புரி நிலையங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் சிறுவர் பாதுகாப்புக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

பெரும்பாலும் 17 வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர், யுவதிகளே இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாக அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

## பெற்றோரை இழந்த நிலையில் 217 வவுனியா மாவட்ட சிறார்கள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் கடந்தகால யுத்தம் மற்றும் வேறுபல காரணங்களால் 217 சிறுவர்கள் பெற்றோரை இழந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றது.

இதனைவிட சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் 447 சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்பகம் சிறுவர் இல்லத்தில் 58 சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களுள் 26 சிறார்கள் பெற்றோரை இழந்தவர்களாக காணப்படுகின்றனர். சென்பீற்றர்ஸ் பெண்கள் இல்லத்தில் 52 சிறுவார்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களில் 40 பேர் பெற்றோரை இழந்தவராவர்.

அகிலாண்டேஸ்வரி அருளகத்தில் 96 சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களில் 73 பேர் பெற்றோரை இழந்தவர்களாவார்கள். சென்.மேரிஸ் சிறுவர் இல்லத்தில் 10 சிறுவர்களும், பகவான் சத்தியசாயி இல்லத்தில் 34 சிறுவர்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

## மாங்குளம் திலீபன் மருத்துவமனை இரண்டாம் ஆண்டு நிறைவுவிழா

(மாங்குளம்)

மாங்குளம் பிரதேச மக்களின் மருத்துவ பணியை மேற்கொண்டு வரும் தியாகி திலீபன் மருத்துவமனையின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா, கடந்த திங்கட்கிழமை மருத்துவமனை வளாகத்தில் மருத்துவமனை அபிவிருத்திக் குழுத் தலைவர் சிவானந்தம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பொதுச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் தங்கன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் உரை நிகழ்த்துகையில், களமுனையில் போராடிக் காயமடைந்த போராளிகளுக்கான மருத்துவ சேவைகளை வழங்கிய இந்த மருத்துவமனை, இன்று மருத்துவ நிலையங்களில் மக்களுக்கு மகத்தான சேவையை ஆற்றி வருகின்றது என தெரிவித்தார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே*
*நாவினால் சுட்ட வடு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## பொங்குதமிழும், பொறுக்காத மனங்களும்

பௌத்த சிங்கள இனவெறியர்களினதும், பேரினவாத அமைப்புக்களினதும் - மற்றும் சில தமிழின விரோதக்குழுக்களினதும் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும், எதிர்வரும் சனிக்கிழமையன்று கனடாவில் பொங்குதமிழ் நிகழ்வானது உணர்வெழுச்சி பொங்க நடைபெறவுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன.

ஏற்கனவே, உலகின் புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் வாழும் பல்வேறு நாடுகளில் பொங்குதமிழ் நிகழ்வானது கடந்த இரு ஆண்டு காலத்தில் பூரிப்படையவைக்கும் விதத்தில் கொண்டாடப்பட்டது நினைவிருக்கலாம்.

ஒரு தனித்துவ இனம் தனது மொழிசார் அடையாளங்களைப் பேணிப்பாதுகாக்கவும், தனது மொழிசார் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியப் பெருமைகளை உலகிற்கும் தமது எதிர்காலத் தலைமுறையினர்க்கும் உணர்த்தவும், தமது மொழிக்கு விழா எடுப்பதென்பது வழமையானதொன்றே.

அதேபோன்று, ஒடுக்கப்பட்டு அடக்குமுறைக்குள்ளான ஓர் இனம், அரசபயங்கரவாத்தின அகோரதாக்குதல்களுக்கு முகம் கொடுக்கமுடியாது தப்பித் திசைதோறும் புலம்பெயாந்து ஏதிலிகளாக புகலிடம் தேடி வாழும் வாழ்விலும் - தமது வேர்மூலத்தை மறவாது தமது காலசாரத் தளத்தின் பெருமையை மறவாது அதனைப் பேணிப் பாதுகாக்கும் உணர்வெழுச்சியுடன் தமக்கு நேர்ந்துள்ள வரலாற்றுத் துயரை, தமக்கு இழைக்கப்பட்டுள்ள அரசியற்கொடுமைகளை உலக சமூகத்துக்கு எடுத்துரைத்து உண்மையை உணர்த்தும் இலக்குடன் ஒரு நிகழ்ச்சியை தாம் புலம்பெயர்ந்துள்ள நாட்டிற்கோ, அந்தநாட்டின் மக்களுக்கோ எந்தவிதமான மனச்சோர்வையும், அதிருப்தியையும் ஏற்படுத்தாத வகையில் நடத்துவது தவறானதொன்றல்ல.

எந்த ஜனநாயக நாடும் தனக்கும், தனது மக்களுக்கும் எந்த விதத்திலும் இடையூறு ஏற்படாத வகையில் தனது நாட்டில் அடைக்கலம் தேடியோ, வேறு எந்தவகையிலோ அனுமதியுடன் நிலைகொண்டு வாழும் மற்றோர் தனித்துவமொழி, கலாசார மற்றும் பண்பாட்டைக்கொண்ட இனம் தம்மவர்களின் இன - மொழி மற்றும் தேசியப்பற்றை வளர்க்கும் நோக்கில் விழாவொன்றையோ, நிகழ்வொன்றையோ நடத்துவதற்கு இடையூறாக இருக்கப்போவதில்லை.

ஜனநாயக அரசியல், கலாசார பாரம்பரியம் இதனை எல்லாவகையிலும் அங்கீகரிக்கவே செய்கிறது.

கனடாவில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வும் இத்தகைய தன்மையைக் கொண்ட தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு, கலை கலாசாரத்தைக்கொண்ட ஒரு உணர்வூட்டும் நிகழ்வேயாகும்.

இது கனடிய அரசுக்கோ, அந்நாட்டு மக்களுக்கோ எதிரான அல்லது அரசியல் முரண்பாடுகளைக் கொண்டதான நிகழ்வேயல்ல...

பொங்கு தமிழ் என்பது தமிழ் மக்களின் மொழிசார் தேசிய இன உணர்வை, புலம்பெயர் புறகலாசார சூழலிலும்கூட மங்காது பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு கலைவெளிப்பாட்டு அரங்கநிகழ்வேயாகும்.

தமிழ்மக்களுக்கு தமிழுணர்வை, தமிழத்தேசிய உணர்வை ஊட்டும் நோக்கை மட்டுமே கொண்ட ஒரு பொது நிகழ்வை- கனடா மக்களுக்கு எதிரானது, விடுதலைப்புலிகளுக்கு ஆதரவானது, அரசியல் உள்நோக்கங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டது என்றெல்லாம் பொய்யான பிரசாரங்களை மேற்கொள்வதன் மூலம் தடுத்து நிறுத்த பேரினவாத - சமாதான விரோதசக்திகள் முனைப்புடன் செயற்படத்தொடங்கியுள்ளமை கவலைதரும், கையாலாகாத் தனமான விடயமேயாகும்.

மேற்படி பொங்குதமிழ் நிகழ்வை கனடாவில் தடைசெய்ய வேண்டும் என கனடிய அரசுக்கு கோரிக்கை விடுத்திருக்கும் ஹெல உறுமய என்ற அரசியல் அமைப்பு, எத்தகைய கோட்பாட்டைக்கொண்டது என்பதை அதன் கடந்த நான்கு மாதகால நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், புறத்தேயுமான அரசியல் நடவடிக்கைகளே கனடிய அரசுக்கு உணர்த்தியிருக்கும்.

மூன்று தசாப்தகால யுத்தத்திற்கு தீர்வுகாண சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும், நோர்வே நாட்டின் அனுசரணையுடனும் மேற்கொள்ளப்பட்டு வந்த சமாதான முயற்சிகளுக்கெதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்ட இதே ஹெல உறுமயக் குழுவினர்தான் நோர்வேயின் தேசியக் கொடியை எரித்து சமாதான முயற்சிகளில் இருந்து அதனை வெளியேறுமாறு கோஷமிட்டவர்கள் என்பதை கனடிய அரசு தெரிந்து கொண்டிருக்கும்.

ஆகவே, ஹெலஉறுமய குழுவினரும், அவர்களின் ஆதரவு அணியினரும் கனடியஅரசுக்கு பொங்குதமிழ் நிகழ்வை நிறுத்துமாறு கொடுக்கும் அழுத்தத்தின் அரசியல் பின்னணியை கனடா புரிந்துகொள்ளும் என்பதில் தமிழ்மக்களுக்கு நம்பிக்கையுண்டு.

பொங்குதமிழ் விழாவை விடுதலைப்புலிகளின் நிகழ்வாக வர்ணித்து அதனை நடத்தவிடாது தடுக்குமாறு, கனடாவில் நின்று கொண்டே கனடிய அரசை நிர்ப்பந்திப்பவர் ஆனந்த சங்கரியார் ஆவார்.


தேர்தலில் தமிழ்த்தேசியத்தை சிதைக்கும் சக்திகளின் கைக்கூலியாக போட்டியிட்டு தமிழ் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்டவர் இந்த ஆனந்தசங்கரி என்பதும் கனடிய அரசுக்கு தெரியாத விடயமல்ல....

தேர்தலின் பின்னர் அஞ்ஞான வாசத்தில் இருந்துகொண்டு அவ்வப்போது தமிழர் விரோத சக்திகளின் ஆணைக்கும், அபிலாஷைக்கும் ஏற்ப அறிக்கைகளை அபத்தமாக வெளியிடுவதன் மூலம் தனது இருப்பை காட்டமுயன்றுகொண்டிருக்கும் சங்கரியாரின் ஆற்றாமையின் வெளிப்பாடாகவும் இந்தக் கனடிய அரசுக்கான விண்ணப்பத்தைக் கருதமுடியும்.

தமிழ்த் தேசியத்தின் எதிரிகளும், சமாதான விரோத சக்திகளும் மட்டுமே பொங்குதமிழ் நிகழ்வை எதிர்க்கும் பொறுக்காத மனம் கொண்டவர்களாக தம்மை இனம் காட்டியுள்ளனர்.

கனடிய அரசு சமாதான முயற்சிகளுக்கு தனது முழுமையான ஆதரவை வெளிப்படையாகவே தெரிவித்துவரும் நேரத்தில், தமிழ்ச்சமூகத்தவரின் தேசிய நிகழ்வுகளில் ஒன்றுபோலாகி வரும் பொங்குதமிழ் செயற்பாட்டைக் கனடிய அரசைக் கொண்டு தடுத்து நிறுத்தச் செய்வதன்மூலம் கனடாவுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையேயான நல்லுறவைச் சிதைக்க எடுக்கும் குழப்பவாத சக்திகளின் உள்நோக்கத்தை கனடிய அரசு புரிந்துகொள்ளும் என்பதே தமிழ் மக்களின் நம்பிக்கை.

# நாடும் நடப்பும்




# பரீட்சை ஒழுங்குபடுத்தலில் ஈடுபட்டிருந்தோர் பல்கலை ஊழியர்களால் வெளியேற்றப்பட்டனர்

யாழ். பல்கலைக்கழகத்தில் பரீட்சை மண்டப ஒழுங்குபடுத்துதலில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள், பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டனர்.

நேற்றுக்காலை யாழ். பல்கைலக்கழகத்தில் மருத்துவ பீடப் பரீட்சைக்கான ஒழுங்குபடுத்துதலில் வெளியிலிருந்து கொண்டு வரப்பட்ட ஊழியர்கள் சிலர் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அந்த வேளை அங்கு வந்த பல்கலைக்கழக ஊழியர்கள் - அவர்களைப் பணிகளை இடைநிறுத்திவிட்டு வெளியேறுமாறும் பணித்துள்ளனர்.

இவர்கள் பல்கலைக்கழகத்தைச் சாராத வெளி ஊழியர்கள் என்றும், கடந்த இருபத்திரண்டு நாட்களாக நாம் தொடர் போராட்டத்தை நடத்திவரும்வேளை - நிர்வாகத்தினர் இவ்வாறு வெளியிலிருந்து ஊழியர்களை நியமித்து கடமைகளை ஆற்ற முனைவது மிகவும் தவறானது எனவும், இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் கருத்து தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தை சக ஊழியர்கள் என்ற ரீதியில் துணைவேந்தரிடம் வலியுறுத்துமாறு ஆசிரியர் சங்கத்தினரிடம் தாம் தெரிவித் துள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# அமெரிக்கர்களின் விபரங்களை திரட்ட தூதரக அதிகாரிகள் யாழ். விஜயம்!

யாழ்.மாவட்டத்திலுள்ள அமெரிக்க நாட்டவர்களின் விபரங்களைப் பெறும் பொருட்டு இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் அமெரிக்க பிரஜைகள் நலன் காப்பகத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரியான எச். வில்லியம்ஸ், தூதரகத்தின் உதவியாளர் சுனேத் சி.விஜயரட்ண ஆகியோரே நேற்றுக்காலை யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர். யாழ்ப்பாணம் வந்த அவர்கள் யாழ்.செயலகம் சென்று யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் அ.சிவசாமியைச் சந்தித்த பின், ஆயர் இல்லம் சென்று கத்தோலிக்க மதகுருமார்களைச் சந்தித்து உரையாடினர்.

இவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்கப் பிரஜைகளின் விபரங்களைச் சேகரிப்பதோடு, அவர்களின் பாதுகாப்பு மற்றும் தமது நாட்டுடனான தொடர்புகள் குறித்தும் ஆராயவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பலர், அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ப)

# பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதியுடனே அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கலாம்

அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்போர் இனி வருங் காலங்களில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப்பிரதியையும் இணைத்தே அனுப்பவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளதாக, யாழ்ப்பாண செயலகத்தில் இயங்கும் ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

இதுவரைகாலமும் அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்போர் தமது பிறப்புச் சான்றிதழின் நிழற்பிரதியை மாத்திரமே இணைத்துத் தமது விண்ணப்பங்களை ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு அனுப்பிவைத்தனர்.

கடந்த காலங்களில் இந்த அடையாள அட்டைகள் விநியோகத்தில் பல ஆள்மாறாட்டங்கள் மற்றும் குழறுபடிகள் நடைபெற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதை அடுத்து, அரசாங்கம் இந்தப் புதிய நடைமுறையை அமுல்படுத்தியுள்ளது.

ஒருவர் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும்போது, மூலப்பிரதியுடன், ஒரு நிழற்பிரதியையும் அனுப்புமாறு பணிக்கப்பட்டுள்ளதால் - ஆட்பதிவுத் திணைக்களம் அடையாள அட்டை வழங்கும்போது மூலப்பிரதி மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ப)

# அடுத்த தேர்தலின்போது மின்னணுக் கருவிகள்

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

எதிர்வரும் வருடத்தில் நடைபெறவுள்ள முதலாவது தேர்தலின் போது பயன்படுத்துவதற்கென 10 ஆயிரத்து 500 மின்னணு உபகரணங்களை வரவழைப்பதற்கு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தீர்மானித்துள்ளார்.

10 ஆயிரத்து 200 தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் இந்தப் புதிய மின்னணு உபகரணங்கள் பொருத்தப்படவுள்ளன. இதுவரைகாலமும் இருந்து வந்த வாக்குச் சீட்டுகளுக்குப் புள்ளடியிடும் நடைமுறைக்குப் பதிலாகவே இது அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

குறிப்பிட்ட இந்த மின்னணு உபகரணத்தில் உள்ள பொத்தானை அழுத்துவதன் மூலம் தாம் விரும்பும் கட்சிக்கு வாக் களிக்க முடியும். இந்த உபகரணங்களை இந்தியாவிலிருந்து வரவழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாளஅட்டையை கட்டாயமாக்கும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதற்குப் பின்னர், இந்த மின்னணு இயந்திரம் மூலம் வாக்களிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலக்கிய விழாவில் பாரம்பரிய கலை நிகழ்வுகளை நடத்த ஏற்பாடு

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இடம்பெறவுள்ள இலக்கிய விழாவில், பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுப் பிரிவினரின் ஏற்பாட்டில் பல பாரம்பரிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஒக்ரோபர் மாதம் 8,9,10 ஆம் திகதிகளில் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அமைச்சால் நடத்தவுள்ள இந்த இலக்கிய விழாவின் ஊர்வலத்திலேயே இந்தப் பாரம்பரிய கலை அம்சங்கள் அரங்கேறவுள்ளன.

அதன்படி இலக்கிய விழாவுக்கான ஊர்வலத்தில் -வடமராட்சி, தென்மராட்சி, நீர்வேலி, புன்னாலைக்கட்டுவன், சங்கானை போன்ற பிரதேசங்களிலிருந்தும், அத்தோடு சண்டிலிப்பாய் பாடசாலை, வேம்படி மகளிர் கல்லூரி, கொட்டடி நமசிவாய வித்தியாலயம், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி ஆகியவற்றிலிருந்து சிலம்பம், காவடி, நட்டுவமேளக் காவடி, வசந்தனாட்டம், ஒயிலாட்டம், குதிரையாட்டம், பொம்மலாட்டம், கும்மி கோலாட்டம், கரகாட்டம், அனுமானாட்டம், செம்பு நடனம், குரங்கு நடனம் போன்ற தமிழர்களது பாரம்பரியத்தை நிலைநிறுத்துகின்ற கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்ச்சி ஒழுங்கினை பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுப் பிரிவினைச் சேர்ந்த, இவ்விலக்கிய விழாவின் ஊர்வலத்தின் நிகழ்ச்சிக்கான இணைப்பாளர் மெற்றாஸ் மெயில் ஒழுங்குபடுத்தியுள்ளார்.







செலான் வங்கியில் வெஸ்டன் யூனியன் ஊடாக இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து பணம் பெறும் ஒவ்வொரு தடவையும் ஐடிடி தொலைபேசி அட்டை ஒன்று (கையிருப்பில் இருக்கும் வரை மட்டும்) இலவசம்!

எந்த நாடாக இருந்தாலும் ஒருசில நிமிடங்களில் வெஸ்டன் யூனியன் மூலம் செலான் வங்கியூடாக பணம் உங்கள் கைகளில்!

பணப்பரிமாற்றலுக்கு பாதுகாப்பானதும் நம்பிக்கையானதும் அதிதுரிதமானதுமான வழி வெஸ்டர்ன் யூனியன்.

ஹொட்லைன்: 2452666

WESTERN UNION
பணப் பரிமாற்றல்

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

தலைமை அலுவலகம்: செலிங்கோ செலான் டவர்ஸ்,
இல. 90, காலி வீதி, கொழும்பு 3
தொ.பே: 2452666, 4701000 பக்ஸ்: 2456456
ஈமெயில்: info@seylan.lk வெப் சைட்: www.eseylan.com

WESTERN UNION பணப் பரிமாற்றல் — செலான் வங்கி

## வெஸ்ரன் யூனியன் - உலகளாவிய ரீதியில் பணத்தை அனுப்புவதற்கும் பெறுவதற்குமான அதிசிறந்த வழி

வெளிநாடுகளிலிருந்து இலங்கையில் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கும், இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு பணத்தை அனுப்புவதற்கும், பாதுகாப்பானதும் நம்பிக்கையானதும், அதிதுரிதமானதுமான வழி வெஸ்ரன் யூனியன். இலங்கையில் பன்முக வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பாரிய நிறுவனங்களில் ஒன்றான செலிங்கோ குறூப்பில் அங்கத்துவம் வகிக்கும் செலான் வங்கி, 1993 ஆம் ஆண்டிலிருந்து வெஸ்ரன் யூனியனுடன் இணைந்து அதன் பணப் பரிமாற்றல் சேவையைச் செய்து வருகிறது. செலான் வங்கியின் 108 கிளைகளில் இச்சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

வெளிநாடுகளில் வாழும், அல்லது வேலை செய்துவரும் இலங்கையர்கள் இலங்கையிலுள்ள தங்கள் அன்புக்குரியவர்களுக்கு விரும்பி பணம் அனுப்பும் ஊடகம் வெஸ்ரன் யூனியனாகும். பணம் கையளிக்கப்பட்டு ஒருசில நிமிடங்களில் அது உங்கள் கைக்கு கிடைத்துவிடும். (அபெக்ஸ் நிறுவனம் சந்தைப்படுத்தலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கென ஒழுங்கு செய்த சிறந்த சேவைகளுக்கான விருது வழங்கல் வைபவத்தில் வெஸ்ரன் யூனியன் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளது).

### நம்பிக்கை

ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான மக்கள் வெஸ்ரன் யூனியன் மூலம் தங்கள் குடும்பங்களுக்கிடையே பணப்பரிமாற்றல் செய்கிறார்கள். ஒவ்வொரு பரிமாற்றலும் எமது உலக தரத்திலான பாதுகாப்பு முறை மூலம் பாதுகாக்கப்படுகின்றது. நீங்கள் அனுப்பும் பணம் குறிப்பிட்ட நபருக்கு விரைவாகவும், பாதுகாப்பாகவும் வழங்கப்பட்டது என்பதை வெஸ்ரன் யூனியன் உங்களுக்கு உறுதிப்படுத்தும்.

### விரைவு

நீங்கள் பணத்தை அனுப்பிய சில நிமிடங்களிலேயே அது உரியவர்களுக்குக் கிடைத்துவிடும். இதற்காக வெஸ்டர்ன் யூனியன் நவீன மின்னியல் தொழில் நுட்பத்தையும் 190க்கும் அதிகமான நாடுகளில் உலகளாவிய ரீதியில் கணினித் தொடரமைப்பையும் பயன்படுத்துகிறது.

### வசதி

வெஸ்ரன் யூனியன் முகவர் நிலையங்கள் உலகெங்கும் உங்களுக்கு வசதியான இடங்களான அஞ்சல் அலுவலகங்கள், சில்லறை விற்பனை நிலையங்கள், சிறப்புச் சந்தைகள், ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள் ஆகியவற்றிலும் ஏனைய பல இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. 90,000க்கும் அதிகமான முகவர் நிலையங்கள் வெஸ்ரன் யூனியனை உலகில் மிகப்பெரிய பணப்பரிமாற்ற மையமாக விளங்கச் செய்கின்றன.

### வடபகுதியில் பணம்பெற இலகுவழிகள்

வடபகுதியில் பரந்த அளவில் செலான் வங்கி வலையமைப்பு இயங்குவதால், வெஸ்ரன் யூனியன் மூலம் இவற்றில் ஒன்றில் நீங்கள் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

வடக்கிலும் ஏரிஎம் காட் வசதிகள் இருப்பதால் ஏரிஎம் மெஷின்கள் மூலம் 24 மணி நேரத்தில் எந்நேரமும் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளலாம்.

# இந்திய அணித் தோல்விக்கு துடுப்பாட்ட வீரர்களே காரணமாம்!

## கிரிக்கெட் விமர்சகர்கள் விசனம்

(புதுடெல்கி)

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் மினி உலகக் கிண்ணப் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் - பாகிஸ்தான் அணியிடம் இந்திய அணி தோல்வி கண்டது, இந்தியாவில் பெரும் அதிருப்தியைத் தோற்றுவித்திருக்கிறது.

இந்திய அணியின் பரம எதிரியாக கருதும் பாகிஸ்தானிடம் தோல்வி கண்டதால், ஆத்திரமுற்ற இந்திய ரசிகர்கள் தமது கொந்தளிப்பை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

கங்கூலியின் சொந்த ஊரான கொல்கத்தா, மும்பை, டெல்கி, அகமதாபாத் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் இந்திய வீரர்களின் படங்கள் எரிக்கப்பட்டது. சில இடங்களில் இந்திய வீரர்களின் கொடும்பாவிகளும் எரிக்கப்பட்டன.

இந்திய ரசிகர்கள் மட்டுமன்றி இந்திய அணியின் முன்னாள் வீரர்களும், தெரிவுக்குழு உறுப்பினர்களும் இந்த தோல்வியினால் ஆவேசமடைந்துள்ளனர்.

இந்திய அணித் தோல்வி குறித்து இந்தியாவின் கிரிக்கெட் பிரபலங்கள் என்ன கூறியுள்ளனர்? பார்ப்போமா?




***சந்தீப் பாட்டில் (முன்னாள் வீரர், ஜுனியர் அணி பயிற்சியாளர்):***

ஏழு துடுப்பாட்ட வீரர்கள் என்ற அடிப்படையே தவறு. ஆறு துடுப்பாட்ட வீரர்கள் சேர்ந்து சாதிக்காததையா, ஏழாவது வீரர் வந்து சாதிக்கப் போகிறார்? அனில் கும்ளேயை விளையாட விடாதது, மிகப்பெரிய தவறு. மெர்சிடீஸ் பென்ஸ்கார் இருந்தும், அதை 'கராஜில்' சும்மா பூட்டி வைத்திருப்பது போலத்தான் இதுவும்.



***ரோஜர் பின்னி (முன்னாள் வீரர்):***

வீரேந்தர் சேவாக், முகமட் கைப், யுவராஜ் சிங் போன்ற வீரர்கள் தங்கள் மீது அணி நிர்வாகம் வைத்திருக்கும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியவில்லை. இவர்களுக்குப் பதிலாக, புதிய வீரர்களை அறிமுகப்படுத்த வேண்டியது அவசியம். ஹேமங் பதானி, ஸ்ரீராம், மகேந்திர சிங்தோனி, கவுதம் காம்பிர் போன்ற பல திறமையான வீரர்கள் நம்மிடம் இருக்கிறார்கள்.

***பிரணாப் ராய் (தேர்வுக்குழு உறுப்பினர்):*** பந்துவீச்சாளர்கள் சிறப்பாக பந்து வீசினார்கள். துடுப்பாட்டகாரர்கள் மோசமான ஆட்டத்தை வெளிப்ப டுத்துகின்றனர். உண்மையிலேயே இது நமக்கு துரதிர்ஷ்டம் தான். தோல்வி க்குக் காரணம் துடுப்பாட்டவீரர்கள்தான்.



***மதன்லால் (முன்னாள் டெஸ்ட் வீரர்):*** திறமையில்லாத வர்களை இன்னும் கட்டி இழுத்துக் கொண்டிருக்கும் ஒரே அணி நாம்தான். மற்ற நாடுகளில் ஒரு வீரர், ஓரிரு போட்டிகளுக்கு மேல் தடுமாறினால் அணியில் நீடிக்கமுடியாது.

நன்றாக விளையாடும் பிரெட் லீ கூட அவுஸ்ரேலிய அணியில் நிரந்தர இடம் பிடிக்க முடிவதில்லை. இங்கு கப்டனில் துவங்கி, ஒரு துடுப்பாட்ட வீரர் கூடச் சரியில்லை. ஒழுங்காக விளையாடாத வீரர்களுக்கு கட்டாயம் ஓய்வு கொடுத்து அனுப்ப வேண்டும்.



***சேட்டன் சவுகான் (முன்னாள் டெஸ்ட் வீரர்):***

நன்றாக விளையாடாத வீரர்களையே ஏன் திரும்பத் திரும்ப அணியில் சேர்க்கவேண்டும். வீரேந்தர் சேவாக்கிற்கு பதில் கவுதம் காம்பிரை துவக்க ஆட்டக்காரராக அனுப்பலாமே? ரோகன் கவாஸ்கரை சேர்த்தது மிகப்பெரிய தவறு. அவருக்குப் பதில் விக்கெட் கீப்பர் தினேஷ் கார்த்திக்கை சேர்த்திருக்கலாம். அவர் நன்றாக துடுப்பெடுத்தாடுவார். இன்னமும் ராகுலை கீப்பிங் செய்யவைப்பது மாபெரும் தவறு.



*சந்து போர்டே (தேர்வுக்குழு முன்னாள் தலைவர்):*

ஏழு துடுப்பாட்ட வீரர்கள் இருந்து என்ன பயன்? சச்சின் இல்லாவிட்டால் எல்லாம் முடிந்து விடுகிறது. சச்சின் போல விளையாடும் ஒரு வீரரைக் கண்டு பிடிக்க வேண்டிய தருணம் இது.




***சுனில் கவாஸ்கர் - (இந்திய அணி முன்னாள் வீரர்):***


இப்படி ஒரு ஆடுகளத்தில் ஸ்கோர் குவிப்பது சிரமமான விஷயம்தான். ஆனாலும், நமது துடுப்பாட்டகாரர்கள் கொஞ்சமாவது பொறுப்புடன் ஆடியிருக்கலாம். இதுபோன்ற நேரங்களில், ஆடுகளத்தில் நீண்ட நேரம் நின்று விளையாட முடிவெடுப்பதே புத்திசாலித்தனம். அந்த வகையில் ராகுல் டிராவிட் ஆட்டம், மிகச்சிறந்த பாடம்.

### மினி உலக கிண்ண நேற்றைய அரையிறுதி ஆட்டத்தில்

# அவுஸ்ரேலியாவை வீழ்த்தியதன் மூலம் இங்கிலாந்து இறுதிப்போட்டிக்குத் தகுதி



இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் மினி உலக கிண்ணப் போட்டியில் நேற்று எட்ஜ்பாஸ்டன் மைதானத்தில் இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் நடந்த அரையிறுதியாட்டத்தில் இங்கிலாந்து 6 விக்கெட்டுக்களால் அவுஸ்ரேலியாவைத் தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு




தகுதி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித் தலைவர், அவுஸ்ரேலிய அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தார். இதன்படி, கில்கிறிஸ்டும், ஹைடனும் ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர்.

ஆரம்பம் முதலே இங்கிலாந்து அணிப் பந்து வீச்சாளர்களின் பந்துகளை அவுஸ்ரேலிய துடுப்பாட்ட வீரர்கள் எதிர்கொண்டு விளையாடுவ



தில் பலத்த சிரமத்தை எதிர்நோக்கினர். இந்த நிலையில் அணி 44 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஹைடன 17 ஓட்டங்களுடன் ஹர்மிசனின் பந்து வீச்சில் திரஸ்கோதிக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன்பின் கில்கிறிஸ்ட்டுடன் ரிக்கிபொண்டிங் இணைந்தார். எனினும், கில்கிறிஸ்ட் 37 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் டரன் கோவின் பந்து வீச்சில் திரஸ்கோதிக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இவ்வாறே அவுஸ்ரேலிய விக்கெட்டுக்கள் சீரான வேகத்தில் வீழ்த்



தப்பட்டபோதும், மார்ட்டின், கிளார்க் இருவரும் அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்க உதவினர்.

இறுதியில் அவுஸ்ரேலிய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மார்ட்டின் 65, கிளார்க் 42, லீமன் 38, பொண்டிங் 29, கில்கிறிஸ்ட் 37, பிரட்லீ 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் டரன்கோ 3, வோகன 2, ஜைல்ஸ், ஹர்மிசன், பிளின்ரொப் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதன்பின்னர் 260 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணியின் வீரர்கள், அவுஸ்ரேலிய பந்துவீச்சாளர்களின் பந்துகளை, சுலபமான முறையில் எதிர்கொண்டு நிதானமாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தனர். இதில் இங்கிலாந்து அணியின் முதல் விக்கெட் அணி 21 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில், வீழ்த்தப்பட்டது. இதில் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தவர் சோலங்கி.

இதன்பின்னர் திரஸ்கோதிக்குடன் அணித் தலைவர் வோகன் இணைந்தார். இருவரும் மிகவும் சிறப்பான முறையில் விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர்.

இந்த நிலையில் திரஸ்கோதிக் 88 பந்துகளில் ஒரு சிக்ஸர் 9 பவுண்டரிகளுடன் 81 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சைமன்சின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

இதன்பின் வோகனுடன், ஸ்ரஸ் இணைந்தார். இவர்கள் சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கையில், வோகன் 86 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து பிளின்ரொப் 9 பந்துகளில் ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி அடங்கலாக 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் ஸ்ரஸிடன் கோலிங்வூட் இணைந்தார். இவர்கள் இருவரும் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 46.3 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தனர். இதில் ஸ்ரஸ் 42 பந்துகளில் 6 பவுண்டரிகள் அடங்களாக 52 ஓட்டங்களையும், கோலிங்வூட் 4 பந்துகளில் 1 பவுண்டரி அடங்கலாக 6 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பிரட்லீ 2, ஜிலெஸ்பி, சைமன்ட்ஸ் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# எனக்குத் திருமணமா? மறுக்கிறார் பார்த்தீவ் பட்டேல்

எனக்கு திருமணம் நடக்கவில்லை என்று இந்திய கிரிக்கெட் வீரர் பார்த்தீவ் பட்டேல் மறுப்பு தெரிவித்தார். இந்திய கிரிக்கெட் வீரர் பார்த்தீவ பட்டேல் (வயது 20) கடந்த 16ஆம் திகதி ரிச்சா ஹரிலால் (வயது 19) என்ற பெண்ணை ராஜ்கோட் நக ரில் ரகசியமாக திருமணம் செய்து கொண்டதாக பிரபல பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியானது.



இது கிரிக்கெட் ரசிகர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில் பார்த்தீவ் பட்டேல் இந்த செய்தியை திட்டவட்டமாக மறுத்துள்ளார். இது குறித்து அகமதாபாத்தில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

எனக்கு திருமணம் நடக்கவில்லை. நான் இப்போது தான் 12ஆம் வகுப்பு தேர்வு எழுதி இருக்கிறேன். வருகிற இரானி கோப்பை கிரிக்கெட் போட்டிக்காக பயிற்சி மேற்கொண்டு வருகிறேன்.

இந்த தருணத்தில் பத்திரிகைகளில் தவறாக செய்தி வெளியாகி இருப்பது மனவேதனை அளிக்கிறது. இது யாரோ ஒருவர் வேடிக்கைக்காக பரப்பிவிட்ட வதந்தியாக இருக்கலாம் இவ்வாறு கூறினார்.

# பங்களாதேஷுடனான டெஸ்ட் மக்மிலன் அணியில் இல்லை

பங்களாதேஷ் அணிக்கெதிராக நடைபெறவுள்ள டெஸ்ட் போட்டியில் கலந்துகொள்ளும் அணியில் இருந்து மக்மிலன் நீக்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி அடுத்த மாதம் நியூஸிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் மோதவுள்ளது.

இந்தப் போட்டிக்கான நியூஸிலாந்து டெஸ்ட் அணியில் இருந்து முன்னணி ஆட்டக்காரர் மக்மிலன் நீக்கப்பட்டார். 52 டெஸ்ட் போட்டிகளில் ஆடி உள்ள மக்மிலனுக்கு ஓய்வுகொடுக்கும் நோக்கில் நீக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இவருக்குப் பதிலாக ஹமிஸ் மார்ஷல் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். டெஸ்ட் போட்டி முடிந்த பின்னர் நடக்க உள்ள ஒரு நாள் போட்டித் தொடரில் மக்மிலன் நிச்சயமாக இடம் பிடிப்பார் என்று நியூஸிலாந்து பயிற்சியாளர் தெரிவித்தார்.




## புதிய உலக சாதனை

**ஏதென்ஸில் நடைபெற்று வரும் வலுவிழந்தோர் ஒலிம்பிக் போட்டியில் 200 மீற்றர் தனிநபர் நீச்சல் போட்டியின் அரை இறுதியில் - 2 நிமிடம் 42.20 விநாடிகளில் கடந்து புதிய உலக சாதனையைப் படைத்த மகிழ்ச்சியில் அமெரிக்காவின் ரூடி கார்சியா.**




# கிரிக்கெட் சபை தலைவராக சரத் பவார் போட்டி!

(புதுடெல்கி)

இந்திய கிரிக்கெட் சபைத்தலைவராக இருக்கும் ஜக்மோகன் டால்மியாவின் பதவிக் காலம் இந்த மாத இறுதியில் முடிவடைகிறது. புதிய தலைவர் தேர்தல் வருகிற 29ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தலைவர் பதவிக்கு மத்திய விவசாய அமைசசரும், மராட்டிய கிரிக்கெட் சங்க தலைவருமான சரத்பவார் போட்டியிடவிருப்பதாக கூறப்படுகிறது.

இதுபற்றி சரத்பவாரிடம் டெல்கியில் நிருபர்கள் கேட்டபோது, தனக்கு வேண்டியவர் எனது பெயரை சிபாரிசு செய்து இருப்பதாகவும், தான் இன்னும் முடிவு எடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கிழக்கில் திட்டமிட்டபடி இன்று படையினர் - புலிகள் சந்திப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இராணுவ அதிகாரிகளுக்குமிடையிலான சந்திப்பு - ஏற்கனவே திட்டமிட்டபடி இன்று நடைபெறும்.

இந்தச்சந்திப்பில் - கலந்துகொள்வதற்காக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் ட்ரொன் புறூவ் ஹொவ்டே இன்று காலை மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவிருப்பதாகத் தெரிய வருகிறது.

விடுதலைப் புலிகள் சார்பில் இந்தச் சந்திப்பில் - மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தலைமையிலான பிரதிநிதிகளும் இராணுவத்தரப்பின் சார்பில், 23 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் வஜிர குணவர்த்தன தலைமையிலான இராணுவ அதிகாரிகளும் கலந்து கொள்வார்கள் என அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட விசேட தளபதியாகப் பொறுப்பேற்றுள்ள கேணல் பானு இன்றைய சந்திப்பில் கலந்துகொள்ளமாட்டார் என விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

மூன்று மாத காலங்களுக்குப் பின்னர் இன்று இடம்பெறவிருக்கும் இந்தச்சந்திப்பு மிக முக்கியமானதொன்றாக அமையுமெனக் கருதப்படுகிறது.

புல்லுமலை மற்றும் காயங்கேணி உட்பட விடுதலைப் புலிப் போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் மற்றும் அரச கட்டுப்பாட்டு பிரதேசங்களில் இடம்பெற்ற ஆட்கொலைச் சம்பவங்கள் போன்றன குறித்தும் இதில் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 8 புலிப் போராளிகளுக்கு விளக்க மறியல் நீடிப்பு!

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 4 பெண்கள் உட்பட 8 விடுதலைப் புலிப் போராளிகளின் விளக்க மறியல் நேற்று முதல் மேலும் 14 நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜீலை மாதம் 14 ஆம் திகதி மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் இவர்கள் பயணம் செய்த வாகனத்தில் ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து - இவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் - இவர்கள் நேற்று மீண்டும் ஆஜர்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 5 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி எம்.எச். எம்.அஜ்மீர் உத்தரவு பிறப்பித்தார்.

## புதிய பொலீஸ்மா அதிபராக சந்திரா பெர்னாண்டோ!

(கொழும்பு)

நாட்டின் 29 ஆவது பொலிஸ் மா அதிபராக - பிரதிப் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ எதிர்வரும் 30 ஆம் திகதி பதவியேற்கவுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் பதவிக்காகத் தாக்கல் செய்யப்பட்ட இவரது நியமனப் பத்திரத்தை அரசியலமைப்புச் சபை ஏற்றுக்கொண்டிருந்தது.

எதிர்வரும் 30 ஆம் திகதியோடு தற்போதைய பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வாவின் பதவிக்காலம் முடிவடைகிறது. இவருக்குப் பதிலாக புதிய பொலிஸ்மா அதிபராக சந்திரா பெர்னாண்டோவின் பெயரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிபார்சு செய்திருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமெரிக்காவிலிருந்து திரும்பியதும் இவர் தனது பதவியை ஏற்றுக்கொள்வார்.

## கௌரவமான....

தங்கள் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் அர்த்தமற்றதாக்கப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டனர். பாரபட்சமான சட்டமூலங்களால் தமிழ் மக்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக் கப்பட்டனர்.

ஜனநாயக வன்முறையற்ற நாடாளுமன்ற வழிகள் எல்லாம் மூடப்பட்ட நிலையில், தமிழ் மக்கள் இலங்கை அரச முறைமையிலிருந்து பிரிந்து செல்வதற்கென 1977 இல் நடந்த தேர்தலில் ஆணை வழங்கினர்.

சுதந்திரத்திற்கும், சமாதானத்திற்குமான தமிழ் மக்களின் இந்த வேட்கையை இலங்கை அரசுகள் இராணுவ வல்லாதிக்கத்தால் அடக்க முயன்றன தமிழ் மக்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ளவும், தமிழர் தாயகப்பிரதேசத்திலிருந்து ஆக்கிரமிப்பு இராணுவத்தை விரட்டவும் ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கினர்.

தொடர்ச்சியான அரச இராணுவ நடவடிக்கைகள் ஓர் முழு அளவிலான யுத்தமாகப் பரிணமித்த வகையில், தமிழ் மக்கள் இனப் படுகொலை, இடப்பெயர்வு அடிப்படைக் கட்டுமானங்களின் அழிவு என முற்றான வாழ்வியலையே இழந்தார்கள். விடுதலைப் போராட்டத்தில் 17,000 இற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர் யுவதிகள் உயிர்த்தியாகம் செய்ததுடன் ஒரு இலட்சம் அளவிலான பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

தமிழ் மக்களின் தேசிய பிரச்சினையைத் தீர்க்கும் நோக்குடன் கடந்த காலங்களில் எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்ட பின்னணியிலும்கூட பொறுப்புணர்வுள்ள விடுதலை இயக்கம் என்ற வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் காலத்திற்குக் காலம் சாத்தியமான மாற்றீடுகளைப் பரிசீலிப்பதில் தாங்கள் ஆர்வமுடன் இருப்பதை வெளிக்காட்டி வந்துள்ளனர்.

இந்த வகையில் விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்த யுத்தநிறுத்தத்தை 2002 பதவியிலிருந்த அரசு மதித்து நிரந்தர யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றையும் செய்தது. இதன் விளைவாக ஆறு சுற்று அரசியல் பேச்சுவார்த்தைகள் நடந்தன.

இறுதித் தீர்வொன்றை எட்டுவதற்கு வெகுகாலம் செல்லும் என்பதை உணர்ந்து இரு தரப்பினரும் ஓர் இடைக்கால ஒழுங்கு தொடர்பாக இணக்கம் கண்டனர்.

இந்த வகையில் அரசு சமர்ப்பித்த யோசனைகள் யாவுமே காலத்தின் தேவைகளை நிறைவேற்றப் போதுமானவையாக இல்லாதிருந்ததால் தமிழீழ விடுதலைப்புலிகள் ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைபைச் சமர்ப்பித்து அதன் அடிப்படையில் இடைநிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்க ஆயத்தமாக இருப்பதையும் தெரிவித்தனர்.

இந்த நிலைப்பாட்டைத் தமிழ் மக்கள் 2004 இல் நடந்த பொதுத் தேர்தலில் உறுதி செய்து வடக்குக் கிழக்கிற்கான 22 நாடாளுமன்றப் பிரதிநிதிகளையும் பரிபூரண ஆதரவுடன் வாக்களித்து உறுதியான ஆணையின் மீது தெரிவு செய்துள்ளனர்.

புதிய கூட்டரசு ஒன்று பதவி ஏற்றதைத் தொடர்ந்து சமாதான நடவடிக்கை முடக்கநிலை அடைந்துள்ளதுடன் அவசர மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றும் பணியும் தேக்கமடைந்துள்ளது.

தமிழ் - மக்களும் அவர்களது தலைமையும் இன்று நெகிழ்ச்சித் தன்மை இல்லாதவர்களென்றும், தீர்மானம் எடுக்கத் தயங்குபவர்கள் என்றும் அநீதியாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

பிரிவினையை அடிப்படையாக வைத்து ஓர் விடுதலைப்போராட்டத்தை நடத்திய தமிழ்த் தலைமை சாத்தியமான மாற்று வழிகளை ஆராய்வதற்கெனப் பேச்சுவார்த்தை முயற்சிக்குள் பிரவேசித்து நிற்கின்றது. இதுவே நெகிழ்வுத் தன்மை இதுவே சமாதானத்திற்கான பெறுபேறு என குறிப்பிடப்பட்டுள்ளது.

## தற்கொலைத் தாக்குதல் குழு கொழும்புக்குள் ஊடுருவலாம்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல் உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று கொழும்புக்கு வந்துள்ளமை குறித்து தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை ஊடகம் ஒன்றுக்கு விஷேட பேட்டியளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## ஆசிரியர்களுக்கான எழுத்தாக்கப்போட்டி

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை யாழ்.மாவட்ட பிரிவினர் உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வடக்கு-கிழக்கு மலையக ஆசிரியர்களுக்கிடையே நடத்தும் தமிழ் மொழி எழுத்தாக்கத் திறன் போட்டி நாளை பி.ப. 1.30 மணிக்கு வலய ரீதியாக பின்வரும் பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும், வலிகாமம் ஆசிரியர்களுக்கு யாழ். இராமநாதன் மகளிர் கல்லூரியிலும், தீவக ஆசிரியர்களுக்கு சேர் வைத்திலிங்கம் துரைசாமி ம.ம.விலும், வடமராட்சி ஆசிரியர்களுக்கு மருதங்கேணி இ.த.க. பாடசாலையிலும், புலோலி மெதடிஸ்தமிஷன் பாடசாலையிலும், தென்மராட்சி ஆசிரியர்களுக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது என தமிழர் கல்வி மேம்பாட்டு பேரவையின் யாழ். மாவட்ட பிரிவு தெரிவித்துள்ளது.

## சமாதான....

பிரதித்தலைவர் கரு ஜெயசூரிய, பேரியல் அஷ்ரப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க உட்பட அனைத்து அரசியல் கட்சித்தலைவர்களும் கலந்து கொண்டனர்.

## பனிச்சங்கேணி....

மோட்டார் சைக்களில் சென்று கொண்டிருந்த இரண்டு போராளிகளை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பிட்ட இடத்தை அவர்கள் கடந்த சில நிமிடங்களின் பின்பே இக்குண்டு வெடித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இதனையடுத்து அந்த இடத்தில் விடுதலைப் புலிகளால் சுற்றிவளைப்பு தேடுதலொன்று மேற்கொள்ளப்பட்டது.

## திருமலை - சிங்களப் பகுதிகளில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பு

திருகோணமலை மாவட்டத்தின் சிங்களப் பிரதேசங்களில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது இதன் காரணமாக சிங்களப்பகுதி எங்கும் இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது.

கடந்த மாதம் 10 ஆம் திகதி கோமரங்கடவல பிரதேசத்தில் 2 ஊர்காவற் படையினர் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் ஊடுருவிய சமயம் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுதலை செய்யக் கோரி கடந்த ஒரு வாரகாலமாக வடக்கு கிழக்கு சிங்கள முன்னணியின் ஏற்பாட்டில் திருகோணமலை மணிக்கூட்டு கோபுரசந்தியில் உண்ணாவிரதப்போராட்டம் நடைபெற்று வருகின்றது.

இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலேயே நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதற்கிடையில் குறிப்பிட்ட 2 ஊர்காவற் படையினரை விடுவிப்பதற்கு விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள தமது போராளிகள் 10 பேரை விடுதலை செய்யுமாறு கோரியுள்ளதாக தெரிவிக்கப்டுகிறது.

இலங்கை அரசாங்கத்தின் சமாதான செயலகம் ஊடாக விடுதலைப்புலிகளின் சமாதான செயலகம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இருந்த போதிலும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் இது சட்ட விவகாரம் என்பதால் இதனை நிராகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (10)

## விடுதலைப்....

நிதியினைப் பெற்று வருகின்றனர்.

நியூயோர்க்கில் - மோதல் தவிர்ப்பு, சமாதானத்தைக் கட்டி எழுப்புதலில் இலங்கையின் அனுபவங்கள் என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஏழு லட்சம் தமிழர்களிடமிருந்து புலிகள் தலா பத்து அமெரிக்க டொலரைப் பெறுகின்றனர். இவ்வாறு - பெறும் முழுத்தொகையைக் கூட்டினாலும் நாம் கொள்வனவு செய்யும் ஆயுதங்களின் அளவின் பணத் தொகையை விடக் கூடியதாகும்.

நோர்வே கடந்த ஐந்து வருடங்களாக விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தை அனுசரணையாளராக மிகவும் கடினமான பணியை ஆற்றிவருகின்றனர்.

விடுதலைப்புலிகள் தமது தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிட வேண்டும்.

தமிழ் மக்களுக்கு குறைபாடுகள் உண்டென்பதனை எனது அரசாங்கமே முதன்முதலில் ஏற்றுக்கொண்டது. 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்செயல்கள் சிங்கள இனவாதிகளாலேயே இடம்பெற்றது. இந்த வன்செயல்களின் பின்னர் 1.2 மில்லியன் தமிழர்கள் இலங்கையிலிருந்து வெளியேறி மேற்குலக நாடுகளில் தங்கியுள்ளனர்.

அவற்றிலும் பிரிட்டன், சுவிற்சர்லாந்து, கனடா மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகள் முக்கியமானவை.

நாங்கள் மிக நீண்ட அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை முன்வைத்தோம். ஆனால் அதனை விடுதலைப்புலிகள் நிராகரித்து விட் டனர். நாங்கள் போரை விரும்பவில்லை. அத்துடன் - இலங்கையைக் கூறு போட்டும் பிரச்சினைக்கு தீர்வு காண விரும்பவில்லை. நாம் சகல இனங்களும் ஜனநாயக முறைப்படி சமத்துவமாக வாழும் தீர்வையே விரும்புகின்றோம். மூன்று இன மக்களிடையேயும் பரஸ்பர உறவு பேணப்படாமையினாலேயே முரண்பாடுகள் அதிகரித்துச் செல்கின்றன. இருந்த போதிலும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமெனில் விடுதலைப் புலிகளுடன் பேசியே தீரவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

எற்கின் ஸ்பென்ஸ் ஒவசீஸ் ரவல்
குறைந்த செலவில் சிங்கப்பூர் சென்றுவர அரிய சந்தர்ப்பம்
சிங்கப்பூர் சென்று வருவதற்கான
விமானக் கட்டணம் 17860/= மட்டுமே
(அனைத்து வரிகள் உட்பட)
பதிவுகள் 23 செப்ரெம்பர் 2004 இற்கு முன்னர் விமான டிக்கற்றுக் களைப் பெற்றுக் கொள்ளவும்.
பயணத் திகதி :- 01/ஒக்ரோபர் தொடக்கம் 14/ டிசம்பர் வரையில்
தொடர்புகள்:- 56/15 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 021 222 3771 Mobile 0777 915824, 0777 270452 (சி/3178)

ஓம்
வைத்தீஸ்வரன் துணை
அதிஷ்ட எண் சோதிடம்
வைத்திய சிகிச்சையால் குணமடைய முடியாத நோயாளர்கள், புத்திரபாக்கிய குறைபாடு உள்ள இளம்தம்பதிகள், இணைந்து வாழ விரும்பியும், முடியாது பிரிந்து வாழும் கணவன் மனைவி, வெற்றிபெற முடியாத காதலர்கள் மீள முடியாத கடன் தொல்லையால் தவிப்பவர்கள், வியாபார - வர்த்தகத் துறையில் வெற்றியீட்ட முடியாது தோல்விகண்டவர்கள், அதிஷ்டகரமான வியாபார விலாசம், ஸ்தாபன பெயர் அமைத்தல்
ஆகிய விடயங்களுக்கு மட்டும் கட்டணம் ரூபா 200/-
விசேடமாக மாணவர்கள் உட்பட சகல நடுத்தர வகுப்பினரும், பயன்பெறுவதற்காகக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. அதிஷ்ட விருத்திப் பிரயோகம் நேரில் வரவும். நேரில் வரமுடியாதவர்கள் (ஆங்கில பிறந்த திகதி) பெயர், கையொப்பம் இட்டு, சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன், கட்டணம் ரூபா 150/- சி.எஸ்.ஆர்.ராஜேஸ்வரன், நடராசா வீதி, வல்வெட்டித்துறை என்ற பெயர் விலாசத்துக்கு மணியோடர் அனுப்பிவைக்கவும். காலக் கிரமத்தில் பதில் தாமதியாது தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.
T.P : மூலம் தொடர்புகொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம். T.P : 021-2222810
மிலேனியம் உல்லாச பயணிகள் விடுதி உங்களை அன்புடன் வரவேற்கிறது
76/60 இராமநாதன் வீதி, கலட்சி - யாழ்ப்பாணம்.
புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய தினங்களில் - 10 AM-4PM
எண்கலை ஆசான் ஸ்ரீமாஸ்ரர் சி.எஸ்.ஆர்.ராஜேஸ்வரன்
புவனஜோதி, நடராசா வீதி, கிழக்கு வீதி, வல்வெட்டித்துறை.
ஞாயிறு, திங்கள், செவ்வாய், ஆகிய தினங்களில் - 7 AM-5PM
(940)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.